# திருக்கோணமலை
# வில்லூன்றிக் கந்தன் கீர்த்தனைகளும்
# காவடிப் பாடல்களும்



கவிஞர், சோதிடர், வி.சிகண்டிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை
# வில்லூன்றிக் கந்தன் கீர்த்தனைகளும் காவடிப் பாடல்களும்

## (முறையீட்டுப் பாடல்கள்)

இந்த நூலுக்காக நீங்கள் வழங்கும் நிதிகள் யாவும் வில்லூன்றிக் கந்தன் ராஜகோபுர பணிகளுக்கு பயன்படும் என்பதை அறியத்தருகிறோம்.


ஆக்கம்

**கவிஞர், சோதிடர் வி.சிகண்டிதாசன்**



வெளியீடு

ஓம் சக்தி சோதிட ஆராய்ச்சி நிலையம்

168/1 நீதி மன்ற வீதி,

திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| வெளியீடு | :- | 07 |
| நூலின் பெயர் | :- | திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தன் கீர்த்தனைகளும் காவடிப் பாடல்களும். |
| நூல் வகை | :- | பக்தி இலக்கியம் |
| நூலாசிரியர் | :- | கவிஞர், சோதிடர். வி.சிகண்டிதாசன் |
| தொகுப்பாசிரியர் | :- | கவிஞர், சோதிடர்- வி. சிகண்டிதாசன் |
| வெளியிடும் உரிமை | :- | நூலாசிரியருக்கு உரியது |
| முதற் பதிப்பு | :- | 2009-08-05 |
| பக்கம் | :- | (எள) - 86 |
| பிரதிகள் | :- | 1000 |
| வெளியீட்டகம் | :- | ஓம் சக்தி சோதிட ஆராய்ச்சி நிலையம் 168/1 நீதிமன்ற வீதி திருக்கோணமலை |
| அட்டைவடிவமைப்பு | :- | அஸ்ரா பிரிண்டஸ் |
| அச்சகம் | :- | அஸ்ரா பிரிண்டஸ் (பிறைவேட்) லிமிடெட் |
| விலை | :- | 200 ரூபா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


சமர்ப்பணம் க

ஆசியுரை உ

ஆசியுரை ச

வாழ்த்துரை ரு

வாழ்த்துரை சா

என்னுரை அ

| பாடல் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| (1) | கறுத்த விநாயகனே! | 01 |
| (2) | கலைமகளே கல்வித் திருமகளே! | 02 |
| (3) | தெட்சண கைலாயம் ! | 04 |
| (4) | தென்றலிசை பாடிவரும் திருக்கோணமலை நகரம் | 05 |
| (5) | வில்லூன்றி வேலவா ! | 06 |
| (6) | தீராத வினைகளைத் தீர்க்கின்ற தெய்வமே! | 07 |
| (7) | வில்லூன்றிக் கந்தனை வேண்டி வருவோர்க்கு ! | 10 |
| (8) | சிந்தும் அழகுத் திருமலையில் | 12 |
| (9) | கோடி புண்ணியம் கோயில் தரிசனம் | 14 |
| (10) | ஆனந்தம் பெருகுது முருகா ! | 15 |
| (11) | பதமலர் நாடிப் பணிசெய்ய! | 16 |
| (12) | வில்லூன்றி நாயகனே! | 18 |
| (13) | வேண்டியுனைத் தேடிவந்தேன்! | 19 |
| (14) | தேடும் தெய்வப் பூமி ! | 20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15) அழகிய திருக்கோணமலையினிலே ................................. 22

(16) வில்லூன்றிப் பதியமர்ந்த வேலையா! ........................... 23

(17) காலையில் தினமும் .................................................. 25

(18) வினைதீர்க்கும் நாயகனே! ........................................ 27

(19) கந்தா கடம்பா! ...................................................... 28

(20) முருகா உன்னைத் தினம் பணிந்தேன் ............................ 30

(21) விடுதலை தருவாய் வேல்முருகா .................................. 32

(22) விரதம் இருந்து வில்லூன்றி வந்தோம் ............................ 34

(23) எப்பொழுதும் உந்தன் காலடியில் கிடக்க ......................... 35

(24) சித்திரத் தேரினில் ! ................................................... 36

(25) வில்லூன்றி அமர்ந்த வேலவனே! .................................. 38

(26) தலைநகர் திருமலையில் ............................................ 40

(27) வில்லூன்றியானே அருள்செய்வாயே ............................... 41

(28) திருக்கோணேசா ! ..................................................... 42

(29) கோணேசப் பெருமான் ஊர்வலம் ...................................... 44

(30) குறைதீர்ப்பாய் கோணேசா .......................................... 46

(31) திருமால்பாதம் சரணடைவோம் ..................................... 47

(32) நாராயணா எங்கள் நாராயணா ...................................... 48

(33) இராஜ இராஜேஸ்வரி அன்னை ஊஞ்சல் பாடல்கள் ............ 49

(34) காவடிப் பாடல்கள் ..................................................... 53

(35) வில்லூன்றிக் கந்தன் தோத்திரக் கவசம் ......................... 68

(36) வில்லூன்றிக் கந்தன் திருப்பள்ளி எழுச்சி ........................ 78

(37) விநாயகர் ஊஞ்சல் பாடல்கள் ........................................ 81


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலஸ்தான முருகன்



சமர்ப்பணம்

அடைக்கலம் தந்தென்னை ஆதரித்து
அன்போடு வளமான வாழ்வளித்து
தடைதுயர் தாக்காமல் அரவணைத்து
தமிழ் கொண்டு தனைப்பாட வழியமைத்து
விடைதேடி அலைவோர்க்கு விடையளித்து
வில்லூன்றிப் பதிவாழும் கந்தனுக்கு!
படைத்த இப் பாமாலை அத்தனையும்
பொற்பாதமலர் சமர்ப்பணம் சேரவைத்தேன்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை ஸ்ரீ வில்லூன்றிக்கந்த சுவாமி தேவஸ்தான
ஆதீனகர்த்தா, சிவாச்சாரிய மணி சிவஸ்ரீ.சு.சுதாகர குருக்கள்
அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

இசைக்கலை, இயற்கலை, நாடகக்கலை ஆகிய தமிழ்க் கலைகள் யாவும் மக்களின் ஆன்மீக வாழ்வின் உயிர்நாடி போன்றவை.

வேதங்களும், ஆகமங்களும் உடம்பின் நடுநாடி போல வாழ்க்கையின் உயிர்த்துடிப்பை உருவாக்கும் கலைகள் யாவற்றையும் தன்னகத்தே கொண்டவை.

சங்ககாலத்தில் அந்தக் கலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு காவியக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை கவிதைக்கலைகளாக விரிவடைந்து மக்களின் வாழ்விற்க்கு வளங்கள் பல நல்கின.

சங்ககாலத்தில் கவிதைக்கலை தனியாக வளர்ச்சியடையத் தொடங்கியது. அதனைப் பயன்படுத்திய முனிவர்கள், பௌராணிகர்கள் கவிஞர்கள், கவிப்புலவர்கள் சான்றோர்கள் எனப்படுவோர். சாஸ்திர சம்மந்தமான கருத்துக்களை விரிவுபடுத்திய புராண இதிகாசங்களைப் படைத்து ஆன்மீக கருத்துக்களை அதன் வழியே தெளிவு படுத்தி மக்களும் இலகுவாக கற்றறிய வழி வகுத்தனர்.

இலக்கண வரம்புகளுக்குட்பட்ட கவிதைகளை மக்கள் அனுபவிப்பதற்குச் சிரமப்படுவார்கள் என உணர்ந்த தியாகராஜ சுவாமிகள் போன்ற மும்மணிகள் தாளமும் இசையும் பொருந்த கீர்த்தனைகள் எழுதி மக்களுக்கு வழங்கினார்கள் அவர்களுடைய கீர்த்தனைகள் தெலுங்கு போன்ற பிற மொழிகளில் அமைந்ததால் தமிழிசை கீர்த்தனைகளை முத்துத்தாண்டவ சுவாமி, அருணாச்சல கவிராயர் போன்ற மகான்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிசை தான் கர்நாடக இசை என நிறுவித்து தமிழ்க் கீர்த்தனைகளை படைத்து மக்களுக்கு வழங்கினார்கள். இந்த பாரம்பரிய பரிணாம வளர்ச்சியில் அமைந்தது தான் கவிஞர். சிகண்டிதாசனுடைய கவிதைகள் ஆத்ம ஞானத்தை ஊட்டவும், சமூக முன்னேற்றக்கருத்துக்கள் மக்களைச் சென்றடையும் படி செய்யவும் எண்ணிய கவிஞர் சோதிடர் சிகண்டிதாசன் அவர்கள் திருமலை வில்லூன்றிக் கந்தன் மீது கீர்த்தனைகளும் காவடிப்பாடல்களும் என்ற நூலை படைத்தளிக்கின்றார்கள் அவர்களுடைய கவித்துவமும், கலை உணர்வும் மென் மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல வில்லூன்றிக் கந்தப் பெருமான் அருள்பாலிக்க வேண்டும்மென்று ஆசீர்வதிக்கிறேன்.

**தேவஸ்தான பிரதமகுரு, சிவாச்சாரியமணி**
**சிவஸ்ரீ. சு. சுதாகர குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வில்லூன்றிக் கந்தன் ஆதீன கர்த்தா பரம்பரையில் தோன்றிய சங்கீத பூஷணம் பிரம்மஸ்ரீ பூரண சுந்தரேஸ்வர ஐயர் அவர்கள் வழங்கிய**

# ஆசியுரை

## தெட்சணகைலாயம் என்றழைக்கப்படும் திருக்கோணமலையில்

இதிகாசத்தோடு தொடர்புடையதாகவும், இராவணனுடைய சிவபக்தியை வெளிப்படுத்திக் கொண்டு நாயன்மார்களினால் பாடல் பெற்ற பெருமையுடன் விளங்குகின்றசிவஸ்தலம் திருக்கோணேஸ்வரம். ஸ்ரீராம பிரானோடு தொடர்பு படுத்தப் பட்ட சிறப்புடைய திருத்தலங்களில் ஒன்றாக திருகோணமலையில் விளங்குவது ஸ்ரீ. வில்லூன்றித் திருத்தலம். கி.பி.17ம் நூற்றாண்டுக்கு முன்னதான வரலாற்றுச் சிறப்புடைய இத்திருத்தலத்தில் முடமாண்டான் கடற்கரையிலிருந்து தாமாக தோன்றி தனுள் நியாசாரிஸாக விளங்குகின்ற இவ் விருப்பிடத்தினை விருப்பமாககக் கொண்டு எழுந்தருளி எமக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டு இருப்பவர் ஸ்ரீ வில்லூன்றிக் கந்தசுவாமியார்.

பரம்பரை பரம்பரையாக விப்பிரசிரேஸ்டர்களான எம் முன்னோராலும் தொடர்ந்து அவர் தம் சந்ததியினராலும் பராமரிக்கப்பட்டு நித்திய நைமித்திய கிரியைகள் ஆற்றிவரபடுகின்ற இவ்வாலயம் காலத்துக்கு காலம் பல திருப்பணிகளையும், கும்பாபிஷேகங்களையும் கண்டு புதுப்பொலிவுடன் விளங்கி வருகின்றது. தற்போது இராஜ கோபுர திருப்பணி வேலைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தின் வரலாறு கந்தனின் கீர்த்தனைகள், இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஊஞ்சல் என்பவற்றை யெல்லாம் திரட்டிக் கூறுகின்ற வகையில் அன்பர் சிகண்டிதாசன் அவர்கள் ஓர் வரலாற்று நூலினை தொகுத்து, ஆலயமகோற்சவ தினமான கொடியேற்றத்தன்று வெளியிடவுள்ளார். எமது அடுத்த தலை முறையினருக்கு கந்தனின் பழமையான வரலாற்று பெருமையினையும், திரு அருட்சிறப்பினையும், கூறுகின்ற வகையில் காலத்தின் தேவையை கருத்திற் கொண்டு இந்நூல் வெளிவர இருப்பது. சிறப்பானதாகும். முருகன் பெயரால் எமது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**பூரணசுந்தரரேஸ்வர ஐயர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வில்லூன்றிக் கந்தன் தேவஸ்தான வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் பெரும் பணிகளையும், சேவைகளையும் ஆற்றி ஓயாமல் உழைக்கும் பெரும் மதிப்புக்குரிய ஆலய மணியகாரர் உயர் திரு.ஆ.ஆ. ஜெயரெட்ணம் ஐயா அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துரை

மூத்த கவிஞர்கள் தங்கள் குலதெய்வங்களுக்கு பாமாலைகளைச் சூட்டி மகிழ்ந்துள்ளனர். இறைவனும் அப்பாமாலைகளை வாடா மல்லிகையாக தன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு அருள் பாலித்துள்ளதை நாம் கண்ணாரக் கண்டும், கேட்டும் வந்துள்ளோம்.

அந்த வகையில் நாம் வாழும் காலத்தில் எம்மோடு வாழ்கின்ற இளம் கவிஞர் சிகண்டிதாசன் அவர்கள் பல ஆலயங்களில் வீற்றிருக்கும் இறைவன் , இறைவியை பாடி மகிழ்ந்ததையும் நூலாக வெளியிட்டதையும் நாம் அறிவோம்.

இந்த இளம் கவிஞன் சிகண்டிதாசன் இறைபக்தியும், குரல்வளமும், கற்பனைவளமும் தன்னகத்தே கொண்டு எம் வில்லூன்றிக் கந்தன் மீதும் பல கவிதைகளை இயற்றிப் பாமாலையாக சூட்டியுள்ளார்கள். இக் கவிதைகளைப் படிக்கும் போது எம் பெருமானின் வரலாறுகளும் அருட் சக்தியும் வெளி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இப் பக்திப் பாமாலையில் உள்ள மணம் கமழும் கவிதைகளை நாளும் படித்துப் பயன் பெறும் வண்ணம் அன்பர்களைக் கேட்டுக் கொள்வதுடன் ; கவிஞர் சிகண்டிதாசன் பல்லாண்டு காலம், சுகநலத்துடன் வாழ்ந்து, இன்னும் பல தெய்வப்பாமாலைகளை இயற்றிச் சீரும் , சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல வில்லூன்றிக் கந்தன் துணையிருக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

ஆ.ஆ. ஜெயரெட்ணம்
(மணியகாரர்)

**வில்லூன்றி
கந்தசுவாமி தேவஸ்தானம்
திருக்கோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வில்லூன்றி ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின் ஊடாக பல சைவப்பணி சேவைகளை செய்து வருவதோடு ; ராஜகோபுர வளர்ச்சிக்கும் அயராது உழைக்கும் எனது அன்புக்கும் ; மதிப்புக்கும் உரிய ஸ்ரீ முருகன் தொண்டர் சபை கௌரவ செயலாளர் ந. செல்வஜோதி அண்ணன் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துரை

திரு. விநாயகம் சத்தியதீசன் மட்டக்களப்பு சித்தாண்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். 1988 ஆம் ஆண்டு தொடக்கம் இருபது ஆண்டுகளுக்கு மேலாக இவருடன் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அன்பாக பழகும் சுபாவமும், எதையும் ஒழிவு, மறைவின்றி வெளியாகப் பேசும் தன்மையும், பல சம்பவங்களை கவிதையினூடாக வெளிப்படுத்திக் கூறும் ஆற்றலும் இவருடன் என்னைத் தொடர்பு கொள்ள வைத்தது.

தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்தில் இவரின் கவிதைகள் தமிழக சஞ்சிகைகள், பத்திரிகைகளை அலங்கரித்து பலரின் பாராட்டுதலைப் பெற்றது. இலங்கையிலும் சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன், சூடாமணி போன்ற பத்திரிகைகளிலும் பல சஞ்சிகைகளிலும் இவரின் கவிதைகள் வெளிவந்தன.

திருக்கோணமலையின் தவப்புதல்வன் சிவயோகச் செல்வன் திரு.சாம்பசிவம் இவரின் கவிதைத்திறமையை அறிந்து பாராட்டி "சிகண்டிதாசன்" என்னும் சிறப்பு பட்டத்தை வழங்கினார். அன்றிலிருந்து சொந்தப் பெயர் மறைந்து கவிஞர் சிகண்டிதாசன் என்ற பெயர் நிலை பெறலாயிற்று. ஆரம்பக்கட்டத்தில் தன் கவிதைகளை நூலாக்கி வெளியிட எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. இதன் காரணமாக மனவேதனையுடன் காணப்பட்டாலும் கவிதை இயற்றும் முயற்சியைக் கைவிட வில்லை.

ஆலயங்களில் வீற்றிருக்கும் இறைவன் இறைவிமேல் பல கவிதைகளை உருவாக்கி வெளியிட அவைகள் நூல் வடிவில் வெளிவந்தன. இதுவரை ஆறு கவிதைத் தொகுப்புகளை நூலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டு உள்ளார் கவிஞர். சிகண்டிதாசன். தமிழ் நாட்டின் திருவேரகத்தில் உருவாகி திருக்கோணமலையில் வந்து அமர்ந்து அருள்பாலிக்கும் வில்லூன்றிக் கந்தன் மேல் அளவற்ற பக்தி கொண்டவர். ஆலயத்தில் தான் இயற்றிய பாடல்களை உள்ளக் குமுறல்களுடன் பாடுவதைக் கேட்கும் போது எமது உள்ளமும் வேதனையடையும். தனது ஏழாவது பாமாலையான 37 தலைப்புகளை உள்ளடக்கி "வில்லூன்றிக் கந்தன் பாமாலையை " உருவாக்கி முருகனுக்குச் சமர்ப்பித்துள்ளார்கள். இவரது முதல் பாடல்களை நாம் "வெருகலம்பதிக்கு பாதயாத்திரை " செல்லும் போது பாடிச் செல்வோம். இவரது பாடல்கள் அடியார்கள் மனதை பெரிதாக கவர்ந்துள்ளதை நாம் கண்டுள்ளோம்.

கவிஞர் இந்நூலை வில்லூன்றிக் கந்தன் கோபுர நிதிக்காக வெளியிடுவது இவர் வில்லூன்றிக் கந்தன் மேல் கொண்ட பக்தியை வெளிக் கொணர்கின்றது.

இத்துடன் இப்பணியை நிறுத்திக் கொள்ளாது பல தெய்வங்களையும், பொது விடயங்களையும் , தான் காணும் நிகழ்வுகளையும் , கவிதையாக்கி மக்களுக்கு வழங்கிட வில்லூன்றிக் கந்தப் பெருமான் அருள் கிடைக்க பிரார்த்தித்து எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ந. செல்வஜோதி**
**கௌரவ செயலாளர்**

ஸ்ரீ முருகன் தொண்டர் சபை,
வில்லூன்றி
திருக்கோணமலை
இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

மட்டக்களப்பு சித்தாண்டியில் பிறந்த இச்சிறியோன் சித்தாண்டி முருகனுக்கு திருப்பணி செய்யும் குடும்பத்தில் பிறந்தாலும் எமது நாட்டில் ஏற்பட்ட துன்பகரமான சூழ்நிலைகளால் 1988ஆம் ஆண்டளவில் திருக்கோணமலைக்கு ஆதரவு அற்ற அகதியாக அடிபட்டு வந்த போது எனக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்து ஆளாக்கி, இந்த மண்ணிலே தனக்கு அருகிலேயே இருந்து பணிசெய்ய வேண்டும் என்பதற்காக ஏற்ற தொரு வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுத்த வில்லூன்றிக் கந்தனுக்கு அவனுடைய திருவருளால் பாடக் கிடைத்த இப்பாடல்களைத் தொகுத்து புத்தகமாக்கி அவனது பொற்பாத கமலங்களில் சமர்ப்பணம் செய்ய வேண்டும் என்ற எனது நீண்டநாள் ஆசை நிறைவேறுவதை இட்டு பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீண்டகாலமாக அல்லல்படும் எமது மக்களுக்கு நல்லதொரு வாழ்வு தீர்வு கிடைக்காமல் இருக்கும், வேதனைகளையும் சோதனைகளையும், இப்பாடல்கள் மூலம் வேண்டுதலாக வெளிப்படுத்தி எல்லாம் வல்ல வில்லூன்றிக் கந்தப் பெருமானிடம். கோரிக்கையாக முன் வைக்கிறேன். இதையேற்று எம்பெருமான் கூடிய விரைவில் எமது மக்களுக்கு நல்லதொரு வாழ்வைத் தீர்வைத் தருவான் என்ற நம்பிக்கையில் எனது பணிகளைத் தொடர்கிறேன்.

இப்பாடல்களில், கணபதி, கலைமகள் தொடக்கம் கந்தனது கீர்த்தனைகள், காவடிப் பாடல்கள், கந்தன் கவசம், திருப்பள்ளி எழுச்சி, உட்பட, இராஜ இராஜேஸ்வரி அன்னை ஊஞ்சல் பாடல்கள், விநாயகர் ஊஞ்சல் பாடல்கள் திருக்கோணேசப் பெருமானுக்கு மூன்று பாடல்கள் , திருமாலுக்கு இரண்டு பாடல்கள் என்ற வகையில் தொகுத்துள்ளேன் இவற்றில் ஏதேனும் குற்றம் குறைகள் இருந்தால் பொறுத்தருள வேண்டுமென கற்றவர்களாகிய பெருமக்களை வேண்டிக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேண்டுவார்க்கு வேண்டியதைக் கொடுக்கும் வில்லூன்றிக் கந்தனை மனதார வேண்டி அவனது பாடல்களை பக்தியோடு பாடும் அடியார்கள் அனைவருக்கும் எம்பெருமானுடைய திருவருள் கிடைக்கப் பிரார்த்தனை செய்கிறேன். இந்நூலுக்காக ஆசியுரைகளை வழங்கிய ஆலய ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு. சுதாகரக் குருக்கள்ஐயா அவர்களுக்கும். சங்கீத பூஷணம் பிரம்ஸ்ரீ பூரண சுந்தரேஸ்வர ஐயர் ஐயா அவர்களுக்கும் வாழ்த்துரைகளை வழங்கிய மதிப்புக்குரிய ஆலய மணியகாரர் உயர் திரு. ஆ.ஆ.ஜெயரெட்ணம் ஐயா அவர்களுக்கும். ஸ்ரீ முருகன் தொண்டர் சபை கௌரவ செயலாளர். அன்புக்குரிய ந.செல்வஜோதி அண்ணன் அவர்களுக்கும் ஒவ்வொரு நூலும் வெளியிடும் போது ஆலோசனைகளை வழங்கி திருத்தங்களை மேற்கொண்டு தரும் எனது கூடப்பிறந்த மூத்த அண்ணன் வி. குணசீலன் அதிபர் அவர்களுக்கும் அழகான முறையில அச்சிட்டுத் தந்த அஸ்ரா பதிப்பகத்தாருக்கும் இதை வெளியிட ஒத்துழைத்த அனைவருக்கும் எனது நன்றியைச் செலுத்துகிறேன். மேலும் என்னால் முடிந்த இச்சிறு பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள். இந்த நூலுக்காக நீங்கள் வழங்கும் நிதிகள் யாவும் வில்லூன்றிக் கந்தனது ராஜகோபுர திருப்பணிகளுக்கு பயன்படும் என்பதை பணிவுடன் அறியத் தருகிறேன்.

**இவ்வண்ணம்**
**பணிவுடன்**
**வி. சிகண்டிதாசன்.**

**<u>நன்றி</u>**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போது கட்டப்படும் ராஜகோபுர
# வரைபட முன்தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போது கட்டப்படும் ராஜகோபுர
# வரை பட பக்கத் தோற்றம்





SIDE ELEVATION

[illegible]
மணியகாரர்
வில்லூன்றி கந்தசாமி கோவில்
திருகோணமலை

DESIGNED BY:
Dr. V. GANAPATI STHAPATI
ARCHITECTS SCULPTORS & BUILDERS
1-46 FIRST AVENUE, VETTUVANKENI,
INJAMBAKKAM VILLAGE, CHENNAI-600041
( COPY RIGHTS RESERVED )

PROPOSED CONSTRUCTION OF FIVE STOREYED RAJAGOPURAM
IN THE PRIMESES OF SRI KANDHASWAMY TEMPLE,
THIRUGONAMALAI, SRILANKA.
( SCALE ; 4 FT TO AN INCH, DATE ; 98-08-07. )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தற்போது கட்டப்படும் நிலையில் உள்ள ராஜகோபுரத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (1) கறுத்த விநாயகனே!



### பல்லவி

கறுத்த விநாயகனே சரணமையா – எமைக்
காத்தருள் செய்ய வேண்டுமையா (கறுத்த.........)

### அநுபல்லவி

திருக்கோணமலையினிலே திகழும் வில்லூன்றியிலே
அருட்கடலாய் அமர்ந்த ஆனைமுகத்தவனே ! (கறுத்த........)

### சரணங்கள்

பெருத்த வயிறோனே பெருமைக்குரியவனே
வருத்தும் வினைபோக்கி வாழ்வைத் தருவாயே
கருணை விழியோடும் ஐந்து கரத்தோடும்
அருளைப் பொழிவாயே அன்பர்க் கருள்நிதியே (கறுத்த........)

ஆதிமுதலாக அமர்ந்த முதற் பொருளே
அகத்தியரும் போற்றிப் பணிந்த அழகுருவே !
சோதி வடிவான தம்பி முருகனுக்கு
சொந்த இடம் தன்னை ஈந்த கணபதியே! (கறுத்த.........)

ஆலயங்கள் நிறைந்த அழகுத் திருமலையில்
அரியல கோயில் உடைய பெருமானே
வேலனையும் துணையாய் வீற்றிருக்க வைத்து
வேண்டி வருவோர்க்கு என்றும் அருள்வோனே! (கறுத்த.......)

வள்ளிக் குறமாதை மணக்க வடிவேலன்
உள்ளத்துயர் கொண்டு உன்னைப் பணிந்தேற்ற
அள்ளிக் கொடுத்து அருள் அன்பைக் காட்டியவா
தள்ளிக் கொடுத்து துணைதம்பிக் குதவியவா! (கறுத்த........)

விருப்புடனே வந்து வேண்டு மடியார்க்கு
நெருக்குதலே இல்லாத நிம்மதியைத் தந்து
உருப்படவே வாழ்வில் உதவிகளைச் செய்வாய்
கருணைக் கடலான கரிமுகனே இறைவா! (கறுத்த........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (2) கலைமகளே கல்வித் திருமகளே!



### பல்லவி

கலைமகளே கல்வித் திருமகளே – உன்
காலடி பணிந்தேன் அருள் மகளே! (கலைமகளே.....)

### அநுபல்லவி

கலைஞர்கள் போற்றும் பூமகளே – உயர்
கலைகளுக்கெல்லாம் பெருமகளே! (கலைஞர்கள்.....)

### சரணங்கள்

நிலைபெறும் கல்வி நீதருவாய் – உன்
நிழலிலே எனக்கும் இடம்தருவாய்
விலைபெற எனது படைப்பெல்லாம் – நீ
வழங்குவாய் கவிதைக் கொடையெல்லாம் (கலைமகளே......)

உலகில் தோன்றும் கலையெல்லாம் – உன்
அருளால் தானே உயர்வாகும்
நிலவில் தோன்றும் ஒளிபோல – இங்கு
நிகழுந்தன் ஒளி வீசும்! (கலைமகளே......)

வெள்ளை அழகு உடையினிலே – நீ
வெண்தாமரையில் வீற்றிருப்பாய்
உள்ளத்தில் தூய உள்ளத்திலே – நீ
உன்னத பொருளாய் குடியிருப்பாய் (கலைமகளே......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலைகளில் சிற்பச் சிலையாக – உனைச்
சேர்ந்திட்ட பிரமா உயிராக
அலைகடல் தோகை விழியாட – உன்
அழகிலே கலைகள் உருவாக (கலைமகளே......)

தலைகளில் மகுட மணியாட – உயர்
தாளத்தில் உந்தன் இடையாட
தலைமுறை கோடி உனைப்பாட – நீ
தருவாய் அருளை எமக்காக (கலைமகளே.......)

விரல்களில் வீணை இசைபாய – தூய
வெண்மை அழகின் ஒளிவீச
சுரங்களில் இன்ப நதிபாய – நீ
சுகங்களைத் தருவாய் நிறைவாக (கலைமகளே......)

சிரங்களில் கையைத் தினமேந்தி – உன்
திருவடி பணிந்தேன் அருள்வேண்டி
வரங்களில் வாழும் கலைதருவாய் – இந்த
வையகம் போற்றும் நிலையருள்வாய் (கலைமகளே......)

மனதினில் ஒளியாய் குடியிருப்பாய் – பிறர்
மகிழ்ந்திடக் கவிதை எனக்களிப்பாய்
தினமுன்னைப் போற்றிப் பணிந்திடுவார் – என்றும்
திடமான கல்வி வளம்பெறுவார் (கலைமகளே.......)

எங்கும் எதிலும் உனதாட்சி – இங்கு
இல்லையென்றால் ஏதுயர்ச்சி
பொங்கும் கலைகள் புதுமைகளை – இங்கு
படைப்பார் உந்தன் பெருமைகளை (கலைமகளே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (3) தெட்சணகைலாயம்........!

### பல்லவி

தெட்சணகைலாயம் என்று சான்றோர்கள் போற்றுமிடம் – எங்கள்
தங்கவடிவேலன் முருகன் வாழுமினிய தலம் (தெட்சண......)

### அநுபல்லவி

பக்தி மணம் பெருகும் உயர் பண்பாளர் திருமலையில்
சக்தி உமை பாலன் வந்து அமர்ந்தான் வில்லூன்றியில் (தெட்சண......)

### சரணங்கள்

அம்பலம் ஆடும் சிவன். இங்கு கோணேசராய் அமர்ந்தார்.
அம்மை மாதுமையும் அவர் அருகினிலே இருந்தார்
சம்பந்தன் தேவாரம் எங்கள் அடியவர்க்குயர் கானம்
சரித்திரப் புகழோடு அந்த இராவணன் ஆண்டஇடம் (தெட்சண....)

அண்ணன் கணபதியும் அன்பு மாமன் திருமாலும்
எண்ணம்போல் அருள்கொடுக்க இங்கு உன்னுடனே இருக்க
புண்ணியங்கள் செய்தே உனைப் பூசிக்கிறோமையா
கண்மணி போலிருந்தே எமைக் காத்திட வாருமையா (தெட்சண.....)

புண்ணிய பூமியென பல பூர்வீகக் கதைகளுண்டு
கண்மணி வடிவேலன் இங்கு அமர்ந்தான் அருள்கொண்டு
எண்ணியதைத் தருவான் எமக்கென்றும் துணையிருப்பான்
வண்ணமயிலேறி வீதி வலம்வரும் வடிவேலன்

தேடிவரும் அடியார் தங்கள் தேவைகளைச் சொல்லி
கோடிமலர்தூவி உனைப் பாடிப் பணிகின்றார்
கூடிவரும் அழகு கொண்டு கோலவிழி காட்டி
நாடியருள் புரியும் எங்கள் நாயகனே காப்பாய்! (தெட்சண......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (4) தென்றலிசை பாடிவரும் திருக்கோணமலை நகரம்

### பல்லவி

தென்றலிசை பாடிவரும் திருக்கோணமலை நகரம்
தேவாரம் பாடப்பெற்ற கோணேசர் வாழும் இடம்

(தென்றலிசை.....)

### அநுபல்லவி

வந்தமர்ந்தான் வடிவேலன் வளமான வில்லூன்றியில்
வாழ்வளித்து மானிடரைக் காக்குமுயர் நற்பதியில்

(வந்தமர்ந்தான்....)

### சரணங்கள்

கந்தனிவன் பேர்சொன்னால் கவலைகள் பறந்தோடும்
செந்தமிழர் பூமியிலே தெய்வீக மணம் கமழும்
அந்தணர்கள் சூழவர அடியார்கள் கூடி வர
வந்திடுவான் மயிலேறி வரம்தரும் முருகேசன் (தென்றலிசை.....)

கப்பல்கள் வந்து செல்லும் கடலோரத் துறைமுகமும்
எப்போதும் அருள்வழங்கும் ஏராள இறைதலமும்
செப்புதற்கு உயர்வான சீர்வளங்கள் தான் சேரும்
அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையனின் பதியாகும்.

(தென்றலிசை.....)

கந்த சஷ்டி நோன்பிருக்க கடல் கடந்து வருமடியார்
வந்து தங்கி வழிபட்டு வடிவேலன் அருள்பெறுவார்
செந்தூரவடிவழகன் செவ்வேளைக் காண்பதற்கு
வந்தாரை வாழவைக்கும் திருமலைக்கு வந்திடுவார்!

(தென்றலிசை.....)

பத்தியுடன் தினம் வந்து பணிகின்ற அடியவரை
சக்தியுள்ள திருக்குமரன் சக்திதந்து காத்திடுவான்
அத்திமுக அண்ணனுடன் அருள்மாமன் திருமாலும்
அருகினில் தானிருக்க ஆறுமுகன் அருள்கொடுப்பான்.

(தென்றலிசை.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (5) வில்லூன்றி வேலவா....!

### பல்லவி

வில்லூன்றி வேலவா வினைகளைத் தீர்ப்பவா!
சொல்லூன்றி வாழுவோர் துயர்களைப் போக்கவா!

(வில்லூன்றி.....)

### அநுபல்லவி

கல்லான நெஞ்சமும் கரைந்திட ஓடிவா!
வல்லோர்கள் ஆணவம் வீழ்ந்திட விரைந்து வா

(கல்லான....)

### சரணங்கள்

செந்தமிழ் தெய்வமே திருமலை நாதனே!
எந்தமிழ் மாந்தரின் இன்னலை மாற்றவா
நொந்துநாம் வாழ்வது தொடர்கதை ஆவதோ?
வெந்தழும் வேதனை என்றுதான் தீருமோ? (வில்லூன்றி.....)

வந்தவர் கொடுமைகள் வாழ்விலே தொடர்வதா?
தந்தையாய் மண்ணிலே தன்குலம் மாழ்வதா?
உந்தனை வேண்டியே உயர்வாய் போற்றுவார்
நிந்தனை நீங்கிட நிம்மதி நல்குவாய்.

(வில்லூன்றி.....)

இங்கெம்மைக் கொடியவர் அழிப்பது நீதியோ?
இங்குதமிழ் குலத்தவர் எந்நாளும் அகதியோ?
எங்களின் சந்ததி எந்நாளும் அடிமையா?
எங்களுக் கென்றொரு வாழ்வுதான் இல்லையா?

(வில்லூன்றி.....)

சங்கரன் புதல்வனே சஞ்சலம் போக்குவாய்
ஐங்கரன் தம்பியே அச்சத்தை நீக்குவாய்
சங்கரி பாலனே சக்தியை நல்குவாய்
சிங்கார வேலனே சீக்கிரம் அருளுவாய்! (வில்லூன்றி.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (6) தீராத வினைகளைத் தீர்க்கின்ற தெய்வமே!

தீராத வினைகளைத் தீர்க்கின்ற தெய்வமே
திருமலை வாசனே முருகா
வீராதி வீரனே வில்லூன்றி அரசனே!
வேண்டினேன் ஓடிவா முருகா 1

(தீராத வினை.....)

கருணைமிகு தெய்வமே கலியுக வரதனே
கதிர்காம வாசனே முருகா
உருகிமனம் வாடுகிறேன் உனதடியைத் தேடுகிறேன்
உளமிரங்கி அருளுவாய் முருகா 2

(தீராத வினை.....)

ஆதாரம் தேடியே அனுதினம் வருகிறேன்
ஆறுதல் நல்குவாய் முருகா
பாதாரம் தேடியே பணிகின்ற பக்தரின்
பாவங்கள் போக்குவாய் முருகா 3

கண்கண்ட தெய்வமே கரிமுகன் தம்பியே
கார்த்திகை பாலனே முருகா
விண்ணவர் தலைவனே கண்ணனின் மருகனே
வருந்துவோர்க் கருளுவாய் முருகா 4

(தீராத வினை.....)

அழகுவடிவேலவனே அன்பர்க்கு அன்பனே!
அன்னை உமைபாலனே முருகா
உனது பணி தொடர்கிறேன் உளமுருகிப் பாடுறேன்
எனதுவினை தீர்க்கவா முருகா 5

வெற்றி வடிவேலனே வில்லூன்றிக் கந்தனே!
வேதனை போக்குவாய் முருகா!
பற்றியுனைத் தொழுகிறேன் பாடித்தினம் பணிகிறேன்
பாவியைக் காக்கவா முருகா 6

(தீராத வினை.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலவள்ளி நாயகா நீலமயில் வாகனா
கோயில்பல உடையவா முருகா
காலமெலாம் தேடுவோர் கண்ணீரில் வாடுவோர்
கவலையைத் தீர்க்கவா முருகா! 7

சூரர்படை வீழ்ந்திட தேவர்குலம் வாழ்ந்திட
வீரர்படை வேல்கொண்ட முருகா
தீராத போரினால் தினம் வாடும் மானிடர்
தீவினை போக்குவாய் முருகா 8

(தீராத வினை.....)

ஆடிடும் கொடியவர் ஆணவம் நீங்கவே
அன்பரைக் காக்கவா முருகா!
வாடிடும் மாந்தர்கள் தேடிடும் வேளையில்
வாழ்க்கையை நல்குவாய் முருகா! 9

கோடிமலர் சூடியே பாடிவரும் அடியவர்
குறைகளைத் தீர்க்கவா முருகா
நாடிவரும் பக்தர்கள் நல்லபடி வாழ்ந்திட
நல்லருள் பொழியவா முருகா 10

(தீராத வினை.....)

செந்தில் வடிவேலனே செந்தமிழ் தெய்வமே!
தென்பழனி ஆண்டவா முருகா
சொந்தயினம் மாழ்வதை துயரோடு அலைவதை
வந்திங்கு மாற்றுவாய் முருகா 11

எண்ணங்கள் நிறைவுற இன்பங்கள் பெருகிட
எமக்கருள் செய்யவா முருகா!
பண்ணிசை பாடியே பதம்மலர் நாடினேன்
பரிவுடன் அருளுவாய் முருகா ! 12

(தீராத வினை.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை காலங்கள் இத்துயர் வாழ்க்கைகள்
என்பதைச் சொல்லுவாய் முருகா
நித்தமும் மாண்டிடும் மாந்தர்கள் வாழ்விலே
நிம்மதி நல்குவாய் முருகா 13

யுத்தமும் துயரமும் தொடர்கதையாகவே
தொடர்வது நீதியோ முருகா
சத்தியம் தர்மங்கள் வெற்றிபெற்றுயுந்திட
தன்னருள் காட்டுவாய் முருகா! 14

(தீராத வினை.....)

ஆண்டாண்டு காலமாய் அடிமையாய் தமிழினம்
நிகழ்வது நீதியோ முருகா
ஏண்டவர் கொடுமைகள் எல்லையை மீறியே
எந்நாளும் தொடர்வதோ முருகா 15

கொலைகளும் கொடுமையும் கோரமாய் மண்ணிலே
கூடியே வதைக்குதே முருகா
அலைந்திடும் அகதிகள் அவலங்கள் மாறிட
அருள் தந்து காக்கவா முருகா 16

(தீராத வினை.....)



REFERENCE LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (7) வில்லூன்றிக் கந்தனை வேண்டிவருவோர்க்கு!

### பல்லவி

வில்லூன்றிக் கந்தனை வேண்டிவருவோர்க்கு
வேண்டும் வரம்தருவான் - எங்கள்
வில்லூன்றிக் கந்தனை வேண்டிவருவோர்க்கு
வேண்டியதைத் தருவான்

(வில்லூன்றிக்......

### சரணங்கள்

திருக்கோணமலையினில் தேடிவரும் பக்தர்
சிந்தை கவர்ந்த குகன் - குலம்
பெருக்கி அருள்தரும் கோணேசருக்கு
பிரணவ முரைத்த மகன்
அடைக்கலம் தேடியே அண்டிவருவோர்க்கு
ஆறுதலைத் தருவான் - தன்
படைக்கலம் ஏந்தியே பகைபினிதுயர்களை
பறந்தோடச் செய்திடுவான்

(வில்லூன்றிக்......

கடல் வழியாகவே கப்பலில் ஏறியே
காண எமை வந்தான் - எங்கள்
திடமான வாழ்வுக்கு உறுதுணையாக
எப்போதுமே திகழ்வான்
படமெடுத்தாடிடும் பாம்பினைக் கழுத்தினில்
சூடிய பரமசிவன் - அந்த
விடமுண்ட கண்டனின் வீர
மகன் தானே வெற்றிவடிவேலன்

(வில்லூன்றிக்......




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் கணபதி ஆதரவாய் அவன்
அருகினிலே இருக்க – அன்புக்
கண்ணனாம் மாமனும் அவன் திருஅழகினை
காணவே இங்கு வந்தார்
வண்ணவடிவேலன் வழிபாடு பணிகளை
வாழ்நாளில் நாம் செய்தால் – எங்கள்
எண்ணங்கள் ஈடேற ஏற்றதொருவாழ்வை
என்றும் எமக்கருள்வான்

(வில்லூன்றிக்......

வீணெந்தன் வாழ்வினை விரையமாய்ப் போக்கினேன்
வெற்றி வடிவேலா! – நான்
ஏனிந்த வாழ்வென ஏதுமே அறிந்திலேன்
எழில்மிகு திருக்குமரா!
நானுந்தன் பணிகளை நாளுமே செய்திட
நல்லருள் தாருமையா – துயர்
தாழ்வெந்தன் வாழ்வினைத் தாக்காமல் காத்திடாய்
சக்தி உமை பாலா !

(வில்லூன்றிக்......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (8) சிந்தும் அழகுத் திருமலையில்

## பல்லவி

சிந்தும் அழகுத் திருமலையில்
சிரிக்குமெங்கள் முருகையா!
விந்தை யாக வில்லூன்றியில்
வினைகளைத் தீர்க்கும் வேலையா!

(சிந்தும்......)

## சரணங்கள்

வந்துவேண்டும் அடியவர்க்கு
வரங்களை நல்கும் கந்தையா!
சொந்தம் கொண்டு வருவோர்க்கு
சுகங்களைக் கொடுக்கும் குமரையா!

(சிந்தும்......)

உந்தன் பாதம் பணிந்திடவே
உள்ளம் அமைதி அடைகிறது
எந்தன் வாழ்வில் எல்லாமே
உன்திரு அருளால் கிடைக்கிறது

(சிந்தும்......)

இந்த வாழ்வு வளமெல்லாம்
இரங்கி எனக்கு நீ கொடுத்தாய்
தந்த பணியைத் தினம் செய்து
தன்னைப் பாடும் வரமளிப்பாய்

(சிந்தும்......)

கந்தா உந்தன் கருணையினால்
காரியம் யாவும் நடக்கிறது
வந்திடும் தீவினை தாக்காமல்
வடிவேல் தானே தடுக்கிறது

(சிந்தும்......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் வினையைப் போக்கிடவா
என்னைச் சிலநேரம் வாட்டுகிறாய்
உந்தன் கருணை இல்லாது
உலகிலேதும் இயங்காது (சிந்தும்......)

தந்தை தாய்க்கு மேலாக
தாங்கி எம்மைக் காத்திடுவாய்
முந்தை வினைகள் களையகற்றி
முத்தி அடையச் செய்திடுவாய். (சிந்தும்......)

உன்னைப் போற்றி பாடுதற்கு
உயிரை எனக்கு நீதந்தாய்!
என்னைப் படைத்த காரணத்தை
இன்று நீயும் உணர வைத்தாய்! (சிந்தும்......)

சின்னத் தவறு செய்தாலும்
சிறுபிள்ளையென்று நீ பொறுப்பாய்
தன்னை வேண்டும் அடியவனை
தவறி விழாமல் காத்திடுவாய் (சிந்தும்......)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (9) கோடிபுண்ணியம் கோயில் தரிசனம்

### பல்லவி

கோடிபுண்ணியம் கோயில் தரிசனம்
நாடிவரும்மனம் நாளும் பெறும் நலம்

### அநுபல்லவி

ஆடி அடங்கிடும் அரிய வாழ்க்கையில்
தேடிப் பணிசெய்தல் தெய்வ பாக்கியம் (கோடி......)

### சரணங்கள்

ஓடிவந்தெங்கள் துயரை நீக்குவான்
உண்மைப் பக்தனின் வினையைப் போக்குவான்
பாடிப் பணிந்திட நன்மை சேருமே!
பணிகள் செய்திட பாவம் தீருமே!
(கோடி....)

அழகு வில்லூன்றிப் பதியில் அமர்ந்தவன்
அன்புக்கரம் கொண்டு அணைத்துக் கொள்பவன்
உலக உயிர்களை படைத்துக் காப்பவன்
உருவும் அருவுமாய் உயர்ந்து நிற்பவன் (கோடி....)

ஆடும் மயிலேறும் அழகன் முருகனை
நாடும் பக்தர்கள் நலங்கள் பெற்றவர்
கூடும் சபையிலே குழந்தையானவன்
தேடும் அறிவிலே தெய்வமானவன் (கோடி....)

அம்மை அப்பனின் அழகுப் புத்திரன்
எம்மைப் படைத்தவன் எங்கும் நிறைந்தவன்
நன்மை செய்வோர்க்கு நலத்தைக் கொடுப்பவன்
வன்மையாளரின் வாழ்வை ஒழிப்பவன் (கோடி....)

கந்தன் நாமத்தை தினமும் சொல்லவே
கவலை யாவுமே கலைந்து போகுமே!
வந்தவினையெல்லாம் மறைந்து போகுமே!
வணங்கி அவன்திருப் பாதம் பணிமவே! கோடி....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (10) ஆனந்தம் பெருகுது முருகா!

### பல்லவி

உனக்கொரு கோபுரம் அமைவதையெண்ணி
எனக்குள்ளே ஆனந்தம் பெருகுது முருகா (உனக்கொரு)

### அநுபல்லவி

மணக்கும் தமிழ்த்தேன் "பா"வினைக் கொடுத்தேன்
மனதினில் உனையே அனுதினம் நினைத்தேன்! (மணக்கும்....)

### சரணங்கள்

தேடியே கோயில் தொண்டு செய்வார்கள்
கோடி புண்ணியப் பலன் பெறுவார்கள்
பாடியே பணிந்து பக்தி கொள்வார்கள்!
பாவத்தைப் போக்கி பயனடைவார்கள்! (உனக்கொரு...)

ஆலயம் கட்டும் அரும்பணி செய்தால்
ஆயுளும் நலமும் பெற்றுயர்ந்திடலாம்
காலன் நெருங்கி வந்தாலும் அகல்வான்
கந்தனின் அருளால் முத்தியும் பெறலாம். (உனக்கொரு...)

வள்ளல் முருகன் வதிவிடம் தன்னை
வளம்பெறச் செய்யும் உயரிய பணிக்கு
உள்ளதைக் கொடுத்து உதவிடுவார்கள்
உன்னத வாழ்வில் உயர்ந்திடுவார்கள் (உனக்கொரு...)

அழகிய கோயில் மனதிலே அமைத்தேன்
அங்கே புன்னழகை அன்புடன் பதித்தேன்
உலகிலே பெரிய உள்ளக் கோவிலை
உனையன்றி இங்கு யாரறிவார்கள் (உனக்கொரு.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (11) பதமலர் நாடிப்பணிசெய்ய !

### பல்லவி

பதமலர் நாடிப் பணிசெய்ய என்ன
பாக்கியம் செய்தேனோ – உன் (பதமலர்....)

### அநுபல்லவி

இதைவிடப் பேறு வேறேது முருகா
எனக்கிந்த உலகத்திலே!

(இதைவிடப்....)

### சரணங்கள்

என் சிந்தையில் வாழும் தெய்வமே எங்கள்
வில்லூன்றி வேலையா!
உன் செயலுக்கு மிஞ்சி செயலேதும் உண்டோ
திருமலைக் கந்தையா!

(பதமலர்....)

எனையாளுமுந்தன் அருளன்றி எந்தன்
வாழ்விலில் உயர்வேது!
வினையாவும் நீங்கும் அருள்தந்து காக்கும்
வேலுக்கு இணையேது!

(பதமலர்....)

கந்தா என்று வந்திடும் போது
கவலைகள் பறக்கிறது!
எந்தன் வாழ்வில் உந்தனருளால்
எல்லாம் கிடைக்கிறது!

(பதமலர்...)

தூயவனாக்கி நேயவ னாக்கி
துலங்கிட அருள் முருகா!
வாய்மையை நோக்கி வாழ்வினைக் கழிக்கும்
வழிகளைத் தா குமரா!

(பதமலர்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயெனவந்து தீவினை சேராத்
திருவருள் தாருமையா!
தாயென இருந்து தனதடியாரைத்
தவறாமல் காருமையா!

(பதமலர்....)

பொன்பொருள் சுகங்கள் கொடுக்குமா உந்தன்
பொற்பாதம் கொடுக்குமின்பம்
இன்முகத்தோடு உன்பணிசெய்தால்
இல்லாது போகும் துன்பம்


(பதமலர்....)

இத்துயர் வாழ்வை இல்லாது நீக்கி
இணையடி சேரச் செய்வாய்
எத்தனை பிறவி எடுத்தாலுமுன்னை
எப்போதும் பாடவைப்பாய்

(பதமலர்....)

உள்ளம் குளிரும் உன்னதபணியால்
உயர்ந்திட எனைச் செய்வாய்
அள்ளும் கவிதை அமுதாலுன்னை
அணைத்திட அருள் கொடுப்பாய்

(பதமலர்...)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (12) வில்லூன்றி நாயகனே...!

### பல்லவி

வில்லூன்றி நாயகனே எங்கள் வெற்றிவடிவேலா!
வில்லங்கத்தில் வாடும் எங்கள் வேதனை தீருமையா!

(வில்லூன்றி...)

### அநுபல்லவி

எல்லையில்லாத துன்பம் எங்கள் வாழ்வில் தொடர்கதையோ!
தொல்லைகள் கூடுதப்பா எமையிங்கு சோதனை செய்யாதே!

(வில்லூன்றி...)

### சரணங்கள்

ஆண்டாண்டு காலமாக நாங்கள் அடிமையாய் வாழுவதோ!
வேண்டா வெறுப்பாக எமையிங்கு வேற்றார் நடத்துவதோ!
நீண்டவரும் போரால் எங்கள் நிம்மதி போனதையா!
மாண்டதமிழ் மாந்தர் கனவை மறைந்திடச் செய்யாதே!

(வில்லூன்றி...)

ஈரமில்லா அரக்கர் எங்கள் இனத்தை அழிக்கின்றார்
தீரமிகு தமிழர் தினமும் செத்து மடிகின்றார்
சூரர்படை அழித்து நொந்த தேவர்குலம் காத்தாய்!
வீரமிகு தமிழர் மானம் வீழ்ந்திடாமற் காப்பாய்! (வில்லூன்றி...)

காலங்கள் மாறியெங்கள் கனவு வெற்றிபெறுவதெப்போ?
கோலங்கள் மாறியிங்கு எங்கள் குடிசனம் வாழ்வதெப்போ?
காலமெலாம் உனக்கு நாங்கள் பூசைபணிசெய்தோம்
காத்திட வேண்டுமென்று தினமும் கண்ணீர்விட்டு அழுதோம்.

(வில்லூன்றி...)

வேலைப்பிடித்தவனே எங்கள் வேதனை தெரியாதா?
காலைத் பிடித்தவர்கள் கொண்ட கவலைகள் தீராதா?
வாலைப் பருவமுள்ளோர் வாழ்க்கை வாடிவதங்குதையா!
சோலைமலைக்குமரா எங்கள் சோகத்தை போக்கிடையா

(வில்லூன்றி...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (13) வேண்டியுனைத் தேடிவந்தேன்..!

### பல்லவி

வேண்டியுனைத் தேடிவந்தேன் வில்லூன்றிக் கந்தா – நான்
வேண்டும் வரம் தந்திடுவாய் வில்லூன்றிக் கந்தா!

(வேண்டி...)

### அநுபல்லவி

ஆண்டிவேடம் பூண்டவனே வில்லூன்றிக்கந்தா – உன்
அடியவரைக் காத்திடுவாய் வில்லூன்றிக் கந்தா (ஆண்டி...)

### சரணங்கள்

பாடி உனை நாடி வந்தேன் வில்லூன்றிக் கந்தா – என்
பாவங்களைப் போக்கிடுவாய் வில்லூன்றிக் கந்தா
கோடிஅன்பர் நெஞ்சில் வாழும் வில்லூன்றிக் கந்தா – எம்மைக்
குறைகளின்றிக் காத்திடுவாய் வில்லூன்றிக் கந்தா

(வேண்டியுனைத்.....)

ஆடுமயில் ஏறிவரும் வில்லூன்றிக் கந்தா – உன்
அழகுமுகம் காண்பதென்றோ வில்லூன்றிக்கந்தா
வீடுபல உடையவனே வில்லூன்றிக்கந்தா – உயர்
வெற்றிகளைத் தந்திடுவாய் வில்லூன்றிக் கந்தா (வேண்டியுனைத்....)

சக்தி உமைபாலகனே வில்லூன்றிக் கந்தா – சிவ
சங்கரனார் திருமகனே வில்லூன்றிக்கந்தா
பக்தி கொண்டு வருவோரை வில்லூன்றிக் கந்தா – நீ
பாதுகாத்து அருள்புரிவாய் வில்லூன்றிக் கந்தா (வேண்டியுனைத்....)

தேவர்குலம் காத்தவனே வில்லூன்றிக்கந்தா – திருக்
கோணமலை நாயகனே வில்லூன்றிக்கந்தா
பாவலர்கள் தமிழமுதே வில்லூன்றிக் கந்தா – நாங்கள்
படும்துயரை மாற்றிடுவாய் வில்லூன்றிக் கந்தா (வேண்டியுனைத்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (14) தேடும் தெய்வப் பூமி !

### பல்லவி

தேடும் தெய்வப் பூமி – திருக்
கோணமலைதன்னில்
வீடுதேடி வந்த – உயர்
வில்லூன்றி வாழ் கந்தா!

(தேடும்...)

### அநுபல்லவி

கூடும் நல்ல பதியில் – அருள்
கோயில் கொண்ட குமரா!
வாடும் மாந்தர் துயரை – நீ
மாற்ற வேண்டும் முருகா!

(கூடும்....)

### சரணங்கள்

நாடுபல கண்டு – பல
நற்றலங்கள் பெற்றாய்
காடுமலை ஆண்டு – உயர்
கதிரமலை அமர்ந்தாய்!
பாடுமிசை கேட்டு – உன்
பக்தர் துயர் தீர்ப்பாய்
ஆடும் மயிலேறி – உன்
அடியவரைக் காப்பாய்!

(தேடும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சள் நிலாத் தேகம் – எனை
மயக்குதையா நாளும்
பஞ்சை ஒத்த பாதம் – நான்
பார்ப்பதெந்தக் காலம்
கொஞ்சுமொழில் வேலா – என்
குறைகள் தீர்பாயழகா
நெஞ்சில் வாழும் கந்தா – உனை
நித்தம் பாடும் வரம்தா

(தேடும்.....)

தஞ்சமென்று வருவார் – உன்
தாழினையே பணிவார்
கெஞ்சி வேண்டும் போது – நீ
கேட்ட வரம் தருவாய்
குஞ்சரியாள் வள்ளிக் – குல
தெய்வானையோடிணைந்து
அஞ்சி அஞ்சி வாழ்வோர் – படும்
அவலங்களைத் தீர்ப்பாய்

(தேடும்....)



உடுப்பிட்டி நூலகம்
REFERENCE LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (15) அழகிய திருக்கோணமலையினிலே!

### பல்லவி

அழகிய திருக்கோணமலையினிலே
அமைந்தநல் வில்லூன்றிப் பதியினிலே (அழகிய...)

### அநுபல்லவி

அழைத்தால் வருவான் வடிவேலன்
அன்பர்கள் நண்பன் சிவபாலன் (அழைத்தால்...)

### சரணங்கள்

அன்புடன் வேண்டிப் பணிசெய்து
அறநெறி தவறா வழி சென்று
நம்பிக்கையோடு துதி செய்து
நல்லநற் செயல்கள் பலசெய்து (அழகிய....)

கருணைக் கடலாம் சண்முகனை
கைகூப்பித் தொழுதால் தீரும்வினை
இருளைப் போக்கி ஒளிதருவான்
ஈசன் உமையாள் இளையமகன் (அழகிய....)

விரதமிருந்து வரும் அடியார்
விரும்பிக் கேட்டவரம் பெறுவார்
பரந்த அழகுப் பன்னிருகை
இரந்து அளிக்கும் இன்பநகை (அழகிய...)

ஒருதரம் திருமுகம் பார்த்துவிட்டால்
அனுதினம் வந்திட மனமேங்கும்
அருள்தரும் அழகுக்கு இணையேது!
அவனருளன்றி எமக்கு வாழ்வேது! (அழகிய....)

கல்லாத மனிதனை கவியாக்குவான்
காலத்தால் வாழ்ந்திட உருவாக்குவான்
பொல்லாத குணங்களைத் தான் மாற்றுவான்
புகழோடு வாழ்ந்திட வழிகாட்டுவான் (அழகிய...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (16) வில்லூன்றிப் பதியமர்ந்த வேலையா..!

### பல்லவி

வில்லூன்றிப் பதியமர்ந்த வேலையா – எங்கள்
வேதனைகள் தீரும்வழி என்றையா? (வில்லூன்றி....)

### அநுபல்லவி

சொல்லூன்றிப் பாடுகிறேன் பாரையா – எங்கள்
சோகங்களை மாற்றவழி சொல்லையா (வில்லூன்றி....)

### சரணங்கள்

கை எடுத்து வேண்டுவோர்கள் வாழ்விலே – நல்ல
காலமான வாழ்வு எப்போ உலகிலே
கைகொடுத்துக் காக்கும் எங்கள் கந்தையா – உன்
கால்பிடித்தேன் கவலைகளைத் தீரையா

(வில்லூன்றி....)

சொல்லொண்ணாத் துயரம் நாளும் தொடர்வதோ? – உன்
சொந்த இனம் கொடியவரால் மாழ்வதோ?
பொல்லாத போர்க்கொடுமை மாறுமோ? – யுத்த
பூமியிலே நல்லமதி தோன்றுமோ?

(வில்லூன்றி....)

வல்லோர்கள் ஆதிக்கம் நீங்கணும் – உனை
வணங்கிடுவோர் துயரங்கள் தீரனும்
எல்லோரும் இன்பமுடன் வாழனும் – இங்கு
இருப்பதெல்லாம் அனைவருக்கும் கிடைக்கனும்



(வில்லூன்றி.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லான கொடியோர் மனம் கரையுமோ? - நாங்கள்
கண்ணீரில் வாடும்காலம் மறையுமோ?
நல்லவர்கள் நாளும் நொந்து வாழ்வதோ? - இந்த
நாட்டில் நீதி தர்மமெலாம் வீழ்வதோ?

(வில்லூன்றி......)

கோடி பக்தர் தேடுகின்ற குமரையா - எங்கள்
குறை களெலாம் தீர்வதெந்த நாளையா
வாடித்தினம் ஓடுவோரைப் பாரையா - நல்ல
வாழ்வு தந்து அனைவரையும் காரையா

(வில்லூன்றி.......)

சூரர்படை வேரறுத்த சண்முகா - உனைச்
சேர்ந்தவரை வாழச் செய்வாய் குருபரா
தீரர்படை நீதிவெல்ல வேண்டுமே - உன்
திருவடிதான் கதியெமக்கு என்றுமே!

(வில்லூன்றி......)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (17) காலையில் தினமும்!

### பல்லவி

காலையில் தினமும் வந்து –எங்கள்
கந்தனை வழிபட்டு வந்தால்
வேலைகளெல்லாம் துலங்கும் – எங்கள்
வில்லூன்றியான் அருள்கிட்டும்

(காலையில்....)

### சரணங்கள்

எத்தனை இடர்கள் வரினும் – இங்கு
எல்லாம் அவனால் விலகும்
சக்தியின் மகனைத் தொழுதால் – வாழ்வில்
சித்திகள் யாவும் பெறலாம்
சோதனை எல்லாம் செய்வான் – நாம்
சோராமல் பணிந்தால் அருள்வான்
வேதனை எல்லாம் தீர்ப்பான் – நாம்
வேண்டுவதெல்லாம் தருவான்

(காலையில்...)

வேளைகள் தோறும் வருவார் – வெற்றி
வேலனைப் பாடித் தொழுவார்!
வாழ்வினில் யாவும் பெறுவார் – நல்ல
வளமுடன் நாளும் திகழ்வார்!
கந்தா கடம்பா என்று – அவன்
காலடி பணிந்தால் நன்று
வந்திடும் வினைகள் நீங்கும் – அவர்
வாழ்க்கையில் நன்மை ஓங்கும்

(காலையில்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ் முருகன் குமரன் – அவன்
சேவைகளைத் தினம் செய்து
வந்திடுவார்கள் வாழ்வில் – நல்ல
வாழ்வும் வளமும் சேரும்
கந்தனைச் சொந்தம் கொண்டு – எங்கள்
கவலையை அவனிடம் சொன்னால்
நொந்திடும் துயரைப் போக்கி – தீய
நோயின்றி எம்மைக் காப்பான்

(காலையில்...)

வலமாய் தினமும் வந்து – வேலன்
வழிபாட்டைச் சீருடன் செய்தால்
நலமும் பலமும் கிட்டும் – பல
நன்மைகள் வந்து சேரும்
தலமாம் வில்லூன்றிப் பதியை – தினம்
தரிசித்து வழிபடுவோர்க்கு
விலகித் தீவினை ஓடும் – உயர்
முத்தி நிலையும் கூடும்

(காலையில்...)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (18) வினைதீர்க்கும் நாயகனே...!

### பல்லவி

வில்லூன்றி வேலவனே! வினைதீர்க்கும் நாயகனே!
சொல்லுதமிழ் அழகோனே! துயரின்றிக் காப்பாயே!

(வில்லூன்றி....)

### அநுபல்லவி

தேன்தமிழ் நாடிருந்து திருமலைக் கடலில் வந்து
மீனவரிடம் சேர்ந்து வில்லூன்றிப் பதி அமர்ந்தாய்!

(வில்லூன்றி....)

### சரணங்கள்

வேதியர் நிலம்தந்தார் வேண்டுவோர் தனம்தந்தார்!
ஆதியில் வாழ்ந்தோர்கள் ஆலயம் உனக்கமைத்தார்!
சாதிமதம் இல்லானே சாந்தோரைக் காப்போனே!
ஓதிடுவார் உள்ளத்தில் ஒளியாக இருப்போனே!

(வில்லூன்றி....)

அகத்திய மாமுனிவர் வழிபட்ட அண்ணனுடன்
செகத்தினில் எழில்கொஞ்சும் தெய்வானை வள்ளியுடன்
தகர்த்துநீ கொடுமைகளைத் தாண்டவம் ஆடுதற்கு
தலத்தினில் உயர்வான வில்லூன்றி வந்தாயே!

(வில்லூன்றி....)

தந்தை கோணமலையிருக்க தாயாரும் அருகிருக்க
சிந்தைகவர் திருத்தலங்கள் சீராகச் சூழ்ந்திருக்க
வந்தாரை வாழவைக்கும் வளமான திருமலையில்
எந்தமிழ் தெய்வமென இனிதமர்ந்த பெருமானே!

(வில்லூன்றி....)

அண்டிவரும் அடியாரை அன்போடு காத்திடுவாய்
தொண்டனாக வைத்திடுவாய் தொடர்ந்துவரச் செய்திடுவாய்
பண்டுதமிழ் மொழியினிலே பண்ணாக உருவெடுத்தாய்
எண்டிசையும் உன்குலத்தை இன்பமுடன் வாழச்செய்வாய்!

(வில்லூன்றி....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (19) கந்தா, கடம்பா!

### பல்லவி

கந்தா கடம்பா வேலவா
கார்த்திகை பாலா சண்முகா

(கந்தா....)

### அநுபல்லவி

உந்தன் காலே கதியென
உள்ளம் உருகிப் பாடுகிறேன் (உந்தன்.....)

### சரணங்கள்

சொந்த நாட்டில் அடிமையாய்ச்
சுதந்திரமின்றி வாழ்ந்திடும்
இந்தத் துயர்கள் மாறுமா?
இன்பம் வாழ்வில் சேருமா?
நொந்து நாளும் அகதியாய்
நோய்நொடியோடு அலைந்திடும்
பந்தபாசம் சேருமா?
பாவவினைகள் தீருமா? (கந்தா....)

ஆண்டுகள் தோறும் அசுரரை
அழித்த விரதம் பிடிக்கிறோம்
நீண்டிடும் யுத்தம் முடியாமல்
நிம்மதியின்றித் துடிக்கிறோம்
மாண்டிடும் தமிழர் வாழ்விலே
மாறுதலேதும் தோன்றுமா?
தூண்டிடும் தீயோர் கொடுமைகள்
தொலைந்திடும் காலம் கூடுமா? (கந்தா...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமுறையாகத் தமிழினம்
தாழாத் துயரில் வாழ்வதா?
விலைமதிப்பில்லா உயிரெலாம்
வீணாய் மண்ணில் மடிவதா?
உலையில் பட்ட மெழுகென
உருகுமெங்கள் வாழ்விலே
நிலைத்திடும் அமைதி சுதந்திரம்
நீதருவாயே சண்முகா (கந்தா....)

கெட்டது எல்லாம் விலகனும்!
கேட்டவரங்கள் கிடைக்கனும்!
பட்டவர் வாழ்வு மலரனும்!
பாதைகள் யாவும் திறக்கனும்!
விட்டது வந்து சேரனும்!
விடிவினில் மாந்தர் மகிழனும்!
தொட்டது யாவும் துலங்கவே!
துணை செய்வாயே வேலவா! (கந்தா...)



பொது நூலகம்
நகராட்சி மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (20) முருகா உன்னைத் தினம் பணிந்தேன் !

### பல்லவி

முருகா உன்னைத் தினம் பணிந்தேன்!
முழுதாய் மனதை நான் கொடுத்தேன் !

(முருகா........

### அநுபல்லவி

வருவாய் எந்தன் அருகினிலே !
தருவாய் உந்தன் அருள்தனையே!

(முருகா........

### சரணங்கள்

வேளை தோறும் நான் வருவேன்
வேண்டி உன்னைப் பாடிடுவேன்
ஏழை இதயம் நீ அறிவாய்
எதையும் தாங்கும் பலமருள்வாய்

(முருகா........

வாழ்வைக் கொடுத்த வடிவேலா
வாட்டம் தீர்ப்பாய் சிவபாலா
தாழ்வைக் கொடுத்து என்நெஞ்சை
தாக்க வேண்டாம் குகநாதா

(முருகா......

ஆழ்ந்த ஆசை அலைமோத
அதனால் நெஞ்சில் துயர்மோத
வீழ்ந்து வீழ்ந்து எழுந்தவனை
வீணாய் போட்டு வாட்டாதே!

(முருகா........

தாழ்ந்த உறவு பாசங்களால்
தாகம் மோகம் தீயாகி
சூழ்ந்து துயரம் தாக்காமல்
துணை செய்வாயே கந்தையா

(முருகா........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப் பாலில் விஷம்போல
வேண்டாத் தீமை சேராமல்
பிள்ளை நெஞ்சைக் காத்திடுவாய்
பிழை செய்தாலும் பொறுத்திடுவாய்

(முருகா........

எவரும் என்னைத் தாக்காமல்
ஏசிப் பேசித் திட்டாமல்
கவரும் சக்தி தந்திடுவாய்
கருணை வாழ்வை ஈந்திடுவாய்

(முருகா........

அன்று தொட்டு இன்று வரை
அடிமையுன்னை மறந்ததில்லை
என்றும் தோல்வி சோதனைகள்
எனக்கு மட்டும் வருவதென்ன?

(முருகா........

உந்தன் கருணை இல்லாமல்
உலகிலொன்றும் நிகழாது
எந்தன் வாழ்வைச் சீராக்கும்
எல்லாமுனது செயலாகும்

(முருகா........

தாக்கம் தன்னை எனக்கீந்து
தமிழைத் தேடி உனைப் போற்றும்
ஆக்கம் தன்னைக் கொடுக்கின்றாய்
அதனால் பாடி வருகின்றேன்

(முருகா........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (21) விடுதலை தருவாய் வேல் முருகா!

### பல்லவி

விடுதலை தருவாய் வேல்முருகா
வெற்றியைக் கொடுக்கும் மால்மருகா
(விடுதலை....

### அநுபல்லவி

கெடுதலை வேரோடு நீசாய்த்து
கேவல வாழ்வைத் தான்மாய்த்து
(கெடுதலை.....

### சரணங்கள்

படுகொலை இல்லாப் பூமியிலே
பயமின்றி வாழ வழி செய்து
நடுநீதி விடிவு எமக்களித்து
நல்லதோர் வாழ்வு சுகமளித்து
(விடுதலை....

அடிமை வாழ்வு அகன்றோட
அனைவரும் சமமாய் வாழ்ந்தாக
கொடியவர் கொடுமை இல்லாமல்
குறைதுயரேதும் அணுகாமல்
(விடுதலை......

இனவெறிப் பகைமை இல்லாமல்
இனசன ஒற்றுமை உருவாக
மனங்களில் மகிழ்ச்சி அலைமோத
மானிடதர்மம் உயிர்வாழ
(விடுதலை......

உரிமைகளோடு நாம் வாழ
உறவுகளோடு உறவாட
நெரிபடும் யுத்தத்துயர்மாற்றி
நிம்மதி வாழ்வை உருவாக்கி
(விடுதலை......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயைப் பொத்தி ஊமைகளாய்
வாடும் மாந்தர் துயர் போக்கி!
நாயைப் போன்று நல்லவரை
நடத்தும் தீயோர் செயல் நீக்கி

(விடுதலை......

இந்த நாட்டில் இழப்போடு
இரத்தம் சிந்தும் துயர் மாற
சொந்த நாட்டில் சுதந்திரமாய்
சுகங்கள் பெற்று நாம் வாழ

(விடுதலை......

அகதியாக அலைவோர்க்கு
அமைதியான வாழ்வளித்து
கைதியாக இருப்போர்க்கு
கருணையோடு விடிவளித்து

(விடுதலை......

மோசமான காரியத்தில்
சூழ்கும் தீயோர்தனை அழித்து
நாசமான செயலோடு
நடக்கும் நரிகள் தமை ஒழித்து

(விடுதலை......

வேசம் போட்டு ஏய்ப்போர்கள்
வேசம் யாவும் கலையவைத்து
கோசம் போட்டுக் குதிப்போர்கள்
குழப்பும் கெட்ட செயலோட்டி

(விடுதலை......

ஆசைத் தீயில் அலைமோதி
அலையாவண்ணம் எமைக்காத்து
பாசத் தீயில் சிக்குண்டு
பரி தவிக்காமல் அரவணைத்து

(விடுதலை......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (22) விரதம் இருந்து வில்லூன்றி வந்தோம் !

### பல்லவி

விரதமிருந்து வில்லூன்றி வந்தோம்
வேண்டும் வரம்தா முருகா

### அநுபல்லவி

திரளும் அடியார் தினமும் போற்றும்
திருமலை வாழும் கந்தா! (விரதமிருந்து.....

### சரணங்கள்

அருளும் பொருளும் அழகும் நிறைந்த
அமுதே வடிவேல் குமரா
உருகும் மனதில் உனையே போற்றிப்
பணிந்தேன் அருள்வாய் வேலா

(விரதமிருந்து.....

நெருங்கும் வினைகள் நீங்கும் வரம்தா
நெடுமால் வண்ணன் மருகா
கருங்கல் மனமும் கரைந்திட அருள்வாய்
கருணைக் கடலே முருகா

(விரதமிருந்து.....

நாளும் பொழுதும் தேடும் அடியார்
நலமுடன் வாழச் செய்வாய்
ஆளும் தீய கொடுமையைப் போக்கி
அமைதி வாழ்வைத் தருவாய்

(விரதமிருந்து.....

வாழும் காலம் வாழும் வாழ்க்கை
வளமாய் இருக்க வேண்டும்
சூழும் துயரக் கொடுமையின்றி
சுகமாய் வாழ வேண்டும்

(விரதமிருந்து.....

இத்தரை எங்கும் உந்தன் கருணை
இருந்து ஆள்வத னாலே
எத்தனை கோடி அடியா ரிதயம்
இருப்பிடம் கொண்டாய் அழகா!

(விரதமிருந்து.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (23) எப்பொழுதும் உந்தன் காலடியில் கிடக்க....!

### பல்லவி

எப்பொழுதும் உந்தன் காலடியில் கிடக்க
ஏழையெனக்கு வரம் தந்தருள்வாய் முருகா (எப்பொழுதும்.......

### அநுபல்லவி

எந்நாளுமே உன்னைப் பாடித்தொழுதிருக்க
உன்னருள் தந்தென்னை மாற்றிடுவாய் முருகா (எ4ப்பொழுதும்.......

### சரணங்கள்

திரும்பும் திசையெல்லாம் தெய்வத்தலமிருக்கும்
தேடும் திருமலையில் வாழும் குகனேசா
விரும்பி வருவோர்க்கு வெற்றியினைக் கொடுக்கும்
வில்லூன்றியம் பதியை ஆளும் சிவனேசா
(எப்பொழுதும்.......

ஒருநாள் ஒருபொழுது உன்முகம் காணத
அந்நாள் பொழுதெல்லாம் ஆனந்தமாயில்லை
வருநாள் ஒவ்வொன்றும் வணங்கி வரும்போது
வருத்தும் துயரங்கள் வினைகளொன்றுமில்லை
(எப்பொழுதும்.......

விழுகின்ற வேளையிலே வேல்கொடுத்து காப்பாய்
வேதனையோடிருந்தால் விருப்புடனே அணைப்பாய்
அழுதிடும் வேளையெல்லாம் ஆறுதலாய் இருப்பாய்
ஆறுஇரு கரம்கொண்டு அடிமையெனைக் காப்பாய்
(எப்பொழுதும்.......

இடருண்டு வருவோரை இருகரம் கொண்டேற்பாய்
இல்லாது வாடுகையில் உள்ளதெல்லாம் கொடுப்பாய்
தொடர்ந்திடும் செயல்களுக்கு துணையாக நீயிருப்பாய்
தொல்லையில்லா வாழ்வை தந்து நீ ஆதரிப்பாய்
(எப்பொழுதும்.......

என்குறை சொல்வதற்கு உனையன்றி யாருண்டு
உன்பணி செய்வோர்க்கு உன்திரு அருளுண்டு
என்னிரு விழி நெஞ்சில் வாழ்ந்திடும் முருகையா!
பன்னிருவிழி நேரில் பார்ப்பது என்றையா!
(எப்பொழுதும்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (24) சித்திரத் தேரினில்.........!

### பல்லவி

சித்திரத் தேரினில் சக்தி வடிவேலன்
வருவதைப் பாருங்கடி – அன்பர்
சிந்தை நிறைந்தவன் விந்தை மிகுந்தவன்
பெருமையைப் பாடுங்கடி – கந்தன்
பெருமையைப் பாடுங்கடி

(சித்திரத்........)

### சரணங்கள்

வில்லூன்றிப் பதியினின் வினைகளைப் போக்கிட
வேலவன் வருகின்றான் – இங்கு
கல்லான நெஞ்சமும் கரைந்து உருகிட
காட்சி தருகின்றான் – இன்ப
காட்சி தருகின்றான்

(சித்திரத்........)

எல்லோர் கரங்களும் வடத்தை இழுத்திட
இனியவன் வருகின்றான் – இங்கு
நல்லோர் மனமெல்லாம் நாமத்தைச் சொல்லிட
நல்லருள் பொழிகின்றான் – கந்தன்
நல்லருள் பொழிகின்றான்

(சித்திரத்........)

வேதமும் மேளமும் விருந்தாய் இசைத்திட
வேலையன் வருகிறான் – நல்ல
நாதமும் நடனமும் நாடி அழைத்திட
நாயகன் வருகின்றான் – எங்கள்
நாயகன் வருகின்றான்

(சித்திரத்........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடி கோலாட்டம் கும்மி கரகங்கள்
கண்ணைக் கவர்ந்திருக்க – கந்தன்
சேவடி தேடிடும் அடியவர் அனைவரும்
செந்தமிழ் "பா" விசைக்க – நல்ல
செந்தமிழ் "பா" விசைக்க


(சித்திரத்........)

வள்ளி தெய்வானை துணைவியர் சேர்ந்து
வள்ளலின் அருகிருக்க – மக்கள்
உள்ளத்தை ஈர்த்திடும் உடையலங்கார
அணிகலங்கள் சிரிக்க – குகன்
அணிகலங்கள் ஜொலிக்க

(சித்திரத்........)

வண்ணமலர்தூவி வானவர் அனைவரும்
வாழ்த்துரைகள் வழங்க – பல
எண்ணமுடையவர் ஏற்படி தங்கள்
வேண்டுதலைச் செலுத்த – உயர்
வேண்டுதலைச் செலுத்த

(சித்திரத்........)



பொது நூலகம் நகராட்சி மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (25) வில்லூன்றி அமர்ந்த வேலவனே!

### பல்லவி

வில்லூன்றி அமர்ந்த வேலவனே!
வினையெலாம் தீர்க்கும் நாயகனே!

(வில்லூன்றி.......

### அநுபல்லவி

சொல்லும் தமிழ்த்தேன் கவிதைகளை
சுவையாய் எனக்குத் தந்தவனே!

(வில்லூன்றி.......

### சரணங்கள்

எல்லையில்லா உன்னருளுக்கு
ஈடுஇணையேதும் கிடையாது
தொல்லையில்லாத வாழ்க்கையினை
தொழுவார்க்கருளும் சண்முகனே!

(வில்லூன்றி.......

கல்லான மனமும் கரைந்துவிடும்
கடைக்கண் பார்வை விழுந்தாலே
பொல்லாத வினையும் போயகலும்
பொற்பாத கமலம் பணிந்தாலே

(வில்லூன்றி.......

நல்லனவெல்லாம் எமக்கீந்தாய்
நாள் தோறும் தேடி வரவைத்தாய்
வல்லமை நல்கும் வடிவேலா
வருவார்க்கருளும் சிவபாலா

(வில்லூன்றி.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் நிறைவாய் நீயிருந்து
ஒளிகாட்டி யெனக்கு அருள்வாயே!
பள்ளத்தில் தவிக்க வைக்காமல்
பன்னிரு கைகொண்டு காப்பாயே!

(வில்லூன்றி.......

எங்கும் நிறைந்த முருகையா
எனக்குனை விட்டால் யாரையா
இங்கு உதவி செய்வதற்கும்
எப்போதும் துணையாய் இருப்பதற்கும்

(வில்லூன்றி.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (26) தலைநகர் திருமலையில்...!

### பல்லவி

தலைநகர் திருமலையில் தமிழர்தம் வில்லூன்றியில்!
நிலைத்திடுமழகா கந்தா நிம்மதி நலங்கள் தாப்பா! (தலைநகர்..)

### சரணங்கள்

என்னை ஏன் படைத்தாயென்று ஏதுமே அறியேனையா
உன்னையே எண்ணிவாழும் உள்ளமே இருந்தால்போதும்
பன்னிரு தடந் தோள் வேலா பதமலர் பணிந்தேன் நாதா
என்னிரு வினையைப்போக்கி இன்பமாய் வாழச் செய்வாய்

(தலைநகர்..)

இழகிய மனதால் நாளும் இரங்கியே நன்மை செய்து
பழகிய மனிதராலே பழிதுயர் சுமந்தேனையா
அழகிய வதனம் காட்டி அருள்தரவேண்டுமையா!
விலகியே வினைகளோட விடிவினைத் தாருமையா!

(தலைநகர்..)

உறுத்திடும் துன்பமெல்லாம் உளத்தினைவாட்டும் போதும்
பொறுத்திடும் இதயம் கேட்டேன் பொறுமையிலுறுதி கேட்டேன்
அறுந்ததோர் பட்டம் போல அலைந்திடும் வாழ்வைமாற்றி
சிறந்ததோர் வாழ்வைத் தாரும், திருமலைக் கந்தா, வேலா!

(தலைநகர்..)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இக்கவிதை 25-10-1989 அன்று ஸ்ரீ முருகன் தொண்டர் சபை மடம் திறப்பு விழா மலரில் வெளியானது.**

## (27) வில்லூன்றியானே! அருள் செய்வாயே!

திருநிறையும் திருக்கோண மலையின் கண்ணே!
திகழினிய வில்லூன்றிப் பதியின் வேலா
அருள்நிறையும் உன்னுடைய விழியைக் காட்டி!
அவனியுள்ளோர் வாழ வழி செய்வாயப்பா
பெருகிவரும் பிரச்சனைகள் தீர நாட்டில்,
பேதமைகள் நீங்கி பொதுவுடமை ஓங்க
உருகிவரும் உனதடியார் குறையைப் போக்கி!
உறுதியுடன் வாழ அருள் புரிவாயப்பா!

தம்பியினைத் தமையனே கொல்லும் காலம்
தரணியிலே உனதருளால் மாறவேண்டும்!
நம்பியவர் நலமோடு வாழ வேண்டும்!
நற்றமிழின் புகழ் பரந்து குலவவேண்டும்!
செம்பிய சிக்கல்கள் மறைந்து எங்கள்
செந்தமிழர் வாழ்வு வளம் சிறக்க வேண்டும்!
செம்மை நிறை வில்லூன்றிப் பதியில் வாழும்
தேசிகனே எமக்கருள வருவாயப்பா!

சூரர் குலம் அழிந்துநல் தேவர் வாழ
சக்தி வடி வேலனாய் வந்தநாதா
தீராத துயரிலே நொந்து வாடும்
திக்கற்ற மாந்தர்கள் துயரை நீக்கி!
போரான வாழ்க்கையினை மாற்றியிந்த
பூமியிலே சமத்துவ உரிமை சேர
சீரான வில்லூன்றிப் பதியில் வாழும்
சித்திர வேலாயுதனே அருள் செய்வாயே!

REFERENCE LIBRARY
Public Library, Trincomalee



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (28) திருக்கோணேசா!

### பல்லவி

கோணேசா திருக் கோணேசா
திருமலை வாசா கோணேசா (கோணேசா....)

### அநுபல்லவி

திருவடி பணிந்தேன் அருள்நேசா
தீவினை தீர்ப்பாய் மலைவாசா (திருவடி....)

### சரணங்கள்

தலைநகர் தட்சண கைலாயம்
தலைமேல் கங்கை நதியாயும்
கலைகளோடு கவி ஓடும்
கண்கள் காண அருள் கூடும்
அலைகடல் சூழ மலைநடுவே
அழகாய் நீயும் வீற்றிருந்து
நிலைதடுமாறும் மானிடர்க்கு
நிம்மதி தருவாய் கோணேசா!

(கோணேசா....)

மாரனை எரித்த மகேஸ்வரனே
மாதுமையோடு அமர்ந்தவனே
வாரணமுகனும் வடிவேலனும்
வலமிடமாக வீற்றிருக்க
பாரம்பரியப் பெருமையுடன்
பாவநாசத் தீர்த்தமுடன்
இராவணன் போற்றித் துதி செய்த
ஈஸ்வரா எங்கள் கோணேசா

(கோணேசா....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்திருஞான சம்பந்தன்
தமிழ்த்தேவாரம் பெற்றவனே!
சிவசிவ என்று துதிப்போர்கள்
சிந்தை குளிரச் செய்வாயே!
குவலயம் யாவும் தன்னகத்தே!
கொண்டுநல்லாட்சி புரிவோனே!
கவலையற்று வாழ்வதற்கு
கருணை காட்டு கோணேசா!

(கோணேசா...)

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்
ஆண்டருள் செய்யும் கோணேசா
தாயினும் மேலாய் எமைத்தாங்கி
தன்னருள் புரிவாய் கோணேசா
தேயும் பிறையைத்தான்சூடி
தேடும் உலகை ஆக்கியவா
நோயும் துயரும் நெருங்காமல்
நீயெமைக் காப்பாய் கோணேசா (கோணேசா...)

ஆதி முதலே கோணேசா
அன்பின் உருவே கோணேசா
சோதி வடிவே கோணேசா
சுகம் தருவோனே கோணேசா
நீதி நேர்மை வாழ்வதற்கு
நீயருள் தருவாய் கோணேசா
பீதி குழப்பக் கொடுமைகளை
போக்கிடுவாயே கோணேசா!

(கோணேசா....)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (29) கோணேசப் பெருமான் ஊர்வலம்...!

### பல்லவி

கோணேசப் பெருமான் ஊர்வலம் – திருக்
கோணமலையில் விழாக் கோலம்

(திருக்கோணேசப்.....)

### அநுபல்லவி

திருமலை மக்கள் செய்ததவம் – எமைத்
தேடி வருகின்றார் பரமசிவம் (திருமலை....)

### சரணங்கள்

வானவெடிகள் வரவேற்கும் – நட்ட
வாழைமரங்கள் வாழ்த்துரைக்கும்
கானமழையில் காதினிக்கும் – இதைக்
காணக் கண்கள் தவமிருக்கும் (கோணேசப்....)

மாவிலை அழகுத் தோரணங்கள் – நல்ல
மாண்புறு காட்சிகள் கவர்ந்திழுக்கும்
பாவிளை இதயங்கள் பலமீட்டும் – எங்கள்
பாவங்களை அவனருள் போக்கும்

(கோணேசப்....)

வீதிகள் தோறும் மின்விளக்கு – வரும்
வீடுகள் தோறும் ஒளிவிளக்கு
சோதிவடிவாய் வருகின்றான் – எங்கள்
சோடனை கண்டு சிரிக்கின்றான். (கோணேசப்....)

அடியார் கூட்டம் அலைமோதும் – இளம்
ஆடவர் மங்கையர் விழிமோதும்
முடியடி தேடி முடியாத – எங்கள்
முதல்வனை நாடில் துயர்தீரும் (கோணேசப்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதைகள் தோறும் அலங்காரம் – சிவ
பக்தர்கள் வழங்கும் பிரசாதம்
போதுமென்றளவு தான் கிடைக்கும் – தினம்
போற்றிடுவார்க்கு அருள் கிடைக்கும் (கோணேசப்....)

பேதங்களேதும் பாராமல் – சிவ
பெருமான் தொண்டே மேலென்று
போட்டி போட்டு அலங்கரிப்பார் – பொதுப்
பணியில் இறைவன் அருள் பெறுவார்! (கோணேசப்....)

தேங்காய் நிறையக் குவித்திடுவார் – வரும்
தீமைஅகல உடைத்திடுவார்–
பாங்காய் பணிந்து போற்றிடுவார் – நல்ல
பாக்கியம் யாவும் பெற்றிடுவார்.

(கோணேசப்....)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (30) குறைதீர்ப்பாய் கோணேசா!

குடிபெருக்கி திருக்கோணமலையமர்ந்த பெருமானே!
படியளக்கும் தெய்வமென பலர்போற்றும் சங்கரனே!
கொடியேந்தி ஆழ்வோர்கள் கொடுமைகளைத்தான் மாற்றி
மடியேந்தி நிற்பவர்கள் மானத்தைக் காருமையா! 1

கொடியேற்றம் திருவிழாவை குறையின்றி நடத்துகிறோம்
வெடியோட்டம் வேதனையோ விலகுவதாய் தெரியவில்லை
அடிவாங்கி அடிவாங்கி அழிகின்ற மாந்தருக்கு!
விடிவான காலத்தை விரைவில் தா கோணேசா! 2

அலைகடல் மலைநடுவில் அம்பிகையை அரவணைத்து
குலையாத அழகோடு குடிகொண்ட லிங்கேசா
தலைமுறைகள் பலநூறு தரிசித்த அருள்நேசா!
நிலைகொண்ட போராட்டம் நீங்குதற்கு அருளையா! 3

நீண்டுகொண்டு போகுமிந்த நீசர்களின் கொடுமையினால்
மாண்டழிந்து போகுமுந்தன் மாந்தர்களைப் பாருமையா!
ஆண்டழிந்த ஆட்சியர்கள் அனைவரையும் கண்டவனே!
மீண்டெழுந்து நாம்வாழ விடிவொன்றைத் தாருமையா! 4

அன்று நீ சம்பந்தன் அழுதிடப் பால் கொடுத்தாய்
நன்றான தேவார நற்பதிகம் பாடவைத்தாய்
இன்று பல குழந்தைகளோ ஏங்கி அழப் பாலுக்கு
ஒன்றுமே தெரியாத ஊமைபோல் இருப்பதென்ன? 5

குடியேறி சொந்தமண்ணில் குறையின்றி வாழ்வதற்கு
படியேறி வருவோர்கள் பாவங்களைப் போக்கிடப்பா
இடிவாங்கி இடிவாங்கி இழந்ததெல்லாம் இனிப்போதும்
படிவாங்கி வாழ்வோரை பாதுகாத்து அருளப்பா! 6

தேவாரம் பாடியுனைத் தொழுதிட்ட அடியார்கள்
தாவார நிழலுமின்றி தவிப்பதைப் பாருமையா
சாவாக நாடெல்லாம் சந்ததிகள் அழியுதையா
பூவாகப் போட்டு உன்னைப் பூசிப்போர் குறைதீர்ப்பாய்! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (31) திருமால் பாதம் சரணடைவோம்...!

### பல்லவி

திருக்கோணமலையில் வாழ்ந்திடும்
திருமால் பாதம் சரணடைவோம் (திருக்....)

### அநுபல்லவி

வரும் துயரெல்லாம் போக்கிடுவான்
வணங்கிடுவோரைக் காத்திடுவான் (வரும்துயர்....)

### சரணங்கள்

மருமக்கள் கணபதி, கந்தனுடன்
மனம்கவர் நல்ல பதியமர்ந்தான்
அருட் கடலான பரந்தாமன்
அவதாரங்கள் படைத்திடுவான் (திருக்....)

கருங்கடல் மேனிக் கண்ணபிரான்
காக்கணம் பூவிழிச் செவ்விதழான்
பெரும்கடல் பாம்பில் துயில்கொள்வான்
பேரானந்தப் பேறுரான்! (திருக்...)

பூமிச் சக்கரம் அவன் கையில்
பொறுப்பாய் நாளும் சுழல்கிறது
சேமிப்பாளர்கள் அவன்நாமம்
சேர்ந்திடுவார்கள் பொற்பாதம் (திருக்...)

அமைதி நல்கும் கீதைமொழி
அடைந்தார் பெறுவார் நல்லவழி
சுமைகள் நீங்கும் தூயவழி
துளபகிரியை நாடும் வழி (திருக்...)

புல்லாங்குழலின் இசையினிலே
பொல்லாங்கெல்லாம் போகச்செய்வான்
எல்லாமறிந்த மாயவனை
என்றும் வேண்டி உயர்வடைவோம் (திருக்....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (32) நாராயணா எங்கள் நாராயணா?

### பல்லவி

நாராயணா எங்கள் நாராயணா – இந்த
மாநிலம் போற்றும் மது சூதனா (நாராயணா....)

### அநுபல்லவி

நந்தகோபால நாராயணா – உனை
வந்தனை செய்தேன் நாராயணா (நாராயணா....)

### சரணங்கள்

திருக்கோணமலையில் வாழ்பவனே – எங்கள்
தீவினை அகற்றும் நாயகனே
குருவாயூரில் தவழ்பவனே – எங்கள்
குறைகளைத் தீர்ப்பாய் மாயவனே (நாராயணா....)

ஏழைகள் தெய்வம் நீயல்லவா – இங்கு
உயிர்களைக் காக்கும் திருமாதவா
வேளைகள் தோறும் வேண்டிவந்தோம் – நாங்கள்
வேண்டுதல் தருவாய் பெருமானே! (நாராயணா....)

மலையைக் குடையாய் ஏந்தியவா – இந்த
வையகம் போற்றும் வைகுந்தா
உலகைக் காலால் அளந்தவனே – உயர்
பாஞ்சாலி மானம் காத்தவனே! (நாராயணா....)

பாரதப் போரை முடித்தவனே – அந்தப்
பாண்டவர் குறையைத் தீர்த்தவனே!
பாரெல்லாம் போற்றும் பரம்பொருளே – இங்கு
பத்தவதாரம் எடுத்தவனே! (நாராயணா....)

வாய்க்குள் உலகைக் காட்டியவா – கொடும்
நோய்க்கு மருந்து நீயல்லவா
காய்க்கும் மரங்கள் இயற்கைகளும் – தினம்
நோக்கும் உனது அருளல்லவா (நாராயணா....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (33) இராஜ இராஜேஸ்வரி அன்னை ஊஞ்சல் பாடல்கள்



திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலயத்தில் எழுந்தருளி அருள்செய்யும் இராஜ இராஜேஸ்வரி அன்னைமேல் ஊஞ்சல் பாடலொன்று தேவையென காலஞ்சென்ற ஆதீனகர்த்தா சிவ சுரானந்தேஸ்வர சர்மா ஐயா அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இப்பாடல்களை எழுதுவதற்காக பல ஆலயங்களில் பாடப்படும் ஊஞ்சல்பாடல்களை ஆய்வுசெய்து எழுதுவதற்கு இறையருள் கூடியுள்ளதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு இதைப் பாடிப் பயனடைய வேண்டுகிறேன்.

## இராஜ இராஜேஸ்வரி அன்னை ஊஞ்சல் பாடல்கள்

திருக்கோணமலை நகர் வில்லூன்றிப் பதியில்
திகழ்ந்திடும் கணபதி கந்தனுடன் சேர்ந்து
அருளாட்சி புரிந்தவளி மாந்தர்களைக் காக்கும்
அன்னையாய் விளங்கிடும் ராஜேஸ்வரி மேல்
உருகிமன நெகிழ்வோடு ஊஞ்சலிசை பாட
உயர்வான வார்த்தைகள் ஊற்றாகச்சேர
கருணைமிகு கரிமுகன் கலைமகள் கதிர்வேல்
கழலடி என்றுமே காப்பதாய் ஆக 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வளம் செறிவையம் பலகையென்றாக

மறைநான்கும் அதைத்தாங்கும் கயிறாக விளங்க

கனிநல்கும் மலர்சோலை காற்றோடு கலந்து

கனிவான இசையோடு வாசனைகள் வீச

வனிதையர்கள் வார்த்தைகளால் வண்ணங்கள் தீட்ட

வானவர்கள் மகிழ்வோடு மலர்தூவி வாழ்த்த

இனிய திரு வில்லூன்றிப் பதியினில் வாழும்

இராஜ இராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 02

திசையெட்டுக் கதிபதிகள் காவலாய் நிற்க

திருமாலும் சங்கரரும் நல்லாசி கூற

அசைந்தாடும் கொடிமலர்கள் சாமரம் வீச

அம்புலியும் செங்கதிரும் அழகினைப் போற்ற

இசை நல்கும் வாத்தியங்கள் இன்பசுகமூட்ட

இளம் தென்றல் இதமான உணர்வுகளை ஊட்ட

இசைவான வில்லூன்றிப் பதியினில் வாழும்

இராஜ இராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல் 03

வண்ணவிழி அசைவிலே வையமெலாமாட

வார்குழல் வடிவிலே கடலலைகள் ஆட

விண்மீன்கள் அணிகளென விளங்கியே ஆட

மணிமகுடம் நவமணி இரத்தினங்களாட

பண்மீட்டி பறவையினம் இன்ப ஒலி எழுப்ப

பக்தர் குலம் கைகூப்பி பணிந்தடியைப் போற்ற

எண்ணம் சேர் வில்லூன்றிப் பதியினில் வாழும்

இராஜ இராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்! 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்களைந்தும் பணி செய்தடியைப் போற்ற

பூவுலகம் பூரிப்பில் பொங்கி விரிந்தாட

வேதங்கள் புராணங்கள் விருந்தினை நல்க

வேதியர்கள் மந்திர நாமங்களை ஓத

நாதர் முடி நாகராசர்குடையாக நிற்க

நாரதரும் நாமகளும் வீணையினை மீட்ட

ஆதனம் சேர் வில்லூன்றிப் பதியினில் வாழும்

இராஜ இராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்! 05

பட்டாடை மேனியிலே பளபளத்து மின்ன

பன்னீர் பூ சந்தன வாசனைகள் வீச

வட்டமுகத் தாமரையில் வண்ணங்கள் கோடி

வானவில் மின்னலென ஒளியழகு சிந்த

கட்டழகு மாந்தரெல்லாம் கைகூப்பி வேண்ட

கற்பூர சோதியிலே காட்சியருள் மேவ

இட்டமுள்ள வில்லூன்றிப் பதியினில் வாழும்

இராஜ இராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்! 06

முனிவர்களும் ஞானிகளும் முத்தியைக் கேட்டு

முழுமனதாய் தியானத்திலிருந்தருளை நோக்க

புனித மிகு தோத்திரங்கள் பாடல்கள் பண்ணை

பூவுலகோர் அகங்களினால் உச்சரித்துப் போற்ற

தணிகை மலை சண்முகரும் தமையனும் சேர்ந்து

தாயாரின் அருகினிலே இருந்து மனம் நெகிழ

இனிய திரு வில்லூன்றிப் பதியில் வாழும்

இராஜ இராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்! 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர்கள் கவிபாடி பணிந்தடியைப் போற்ற
பாவையர்கள் விளக்கேற்றித் தொண்டுகள் செய்ய
காவலர்கள் கவனமுடன், காவல் பணி செய்ய
கண் மலர்கள் பல கூடிப் பார்வையினைத் தூவ
ஏவலர்கள் பணிசெய்ய எதிர்பார்த்து நிற்க
ஏற்றோர்கள் எண்ணத்தில் தோற்ற ஒளிதோன
ஆவலர் சூழ் வில்லூன்றிப் பதியினில் வாழும்
இராஜ இராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்! 08

செஞ்சடையான் உடல் பாதி பெற்றிட்ட தேவி
செங்கரங்கள் பற்றிய சூலம் தீ ஆட
வஞ்சனையை நீக்கிடும் வாள் வில்லுமாட
வரி சங்கு கழுத்து நகை சிலம்புகளும் ஆட
தஞ்சமென்று வருவோர்கள் குறைகளைப் போக்கும்
தளராத அழகோடு அவனியெலாமாட
எஞ்சுமெழில் வில்லூன்றிப் பதியினில் வாழும்
இராஜ இராஜேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்! 09

சீரான சைவநெறி வேதங்கள் வாழி!
சிறப்பான தமிழோடு தர்மங்கள் வாழி!
தீராத வினை தீர்க்கும் தேவியருள் வாழி!
தேவார புராணங்கள் தெய்வங்கள் வாழி!
நேரான இயற்கை வளச் செல்வங்கள் வாழி !
நிலையாக உழைப்பவர் சேவைகள் வாழி!
பேரான திருக்கோணமலை நகர் வாழி!
பேரின்ப அடியார்கள் வாழ வாழியவே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(34)

# முறையீட்டு காவடிப்பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

கந்தனுக்கு மூத்தவனே சரணமையா
கணபதியே கரிமுகனே சரணமையா
எந்தனுக்கு உனையன்றி இவ்வுலகில்
ஏற்றதுணை செய்வார்கள் இல்லையப்பா!
செந்தமிழ்தேன் பாமாலை அடியேன்பாடி
செவ்வேளின் தரிசனத்தைக் காண்பதற்கு
வந்தாரை வாழவைக்கும் வில்லூன்றியில்
வரமளிக்கும் முதற் பொருளே அருள் செய்வாயே! 1

## வில்லூன்றிக் கந்தன் பாடல்கள்

அடைக்கலம் கொடுக்கின்ற அழகா சீலா
அடியவர்க்கு அருள்செய்யும் குமரா கந்தா
படைபலம் மிக்ககொடும் சூரர் தம்மை
பணியவே செய்திட்ட சக்தி பாலா
துடைத்திடவே எந்தனது துயரமெல்லாம்
தூயஉன் மலரடியை வேண்டுகின்றேன்.
விடையளிக்கும் வில்லூன்றிப் பதியில் வாழும்
வெற்றிவடிவேலவனே அருள் செய்வாயே ! 2

ஆறுபடை வீடுபோல் அவனியெல்லாம்
அழகான கோயில்பல கொண்டவேலா
ஏறியே பலகோயில் தலங்கள் வேண்டி
என்றுமுந்தன் நாமத்தை உச்சரித்து
கூறிய என்னுடைய துயரமெல்லாம்
குகனே உன் திருவடியைச் சரணடைந்தேன்
தேறிடும் வில்லூன்றிப் பதியில் வாழும்
தேவர்குலத் தளபதியே அருள் செய்வாயே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய தேசத்தில் இருந்து எங்கள்
இலங்கை திருக்கோணமலை ஆள்வதற்கு
வந்துகடல் வழியாகச் சேர்ந்த வேலா
வணங்கிடும் அடியவரைக் காக்கும் கந்தா
நொந்திடும் ஊழ்வினைத் துயரைநீங்கி
நிம்மதியாய் உன்னுடைய நிழலில் வாழ
சிந்துமொழில் வில்லூன்றிப் பதியில் வாழும்
சிவனுமை திருமகனே அருள் செய்வாயே! 4

ஈழத்தின் தலைநகரமென்று சொல்லும்
இலங்குகின்ற கோணேசர் பூமிதன்னில்
சூழவே தாய்தந்தை தமையனோடு
சுந்தரமாய் அமர்ந்திட்ட சண்முகேசா
வாழவே மேன்மையுடன் வையகத்தில்
வணங்குகிறேன் உனைவேண்டி எந்தநாளும்
ஆளவே வில்லூன்றிப் பதியில் வாழும்
அன்புவடி வேலவனே அருள் செய்வாயே! 5

உள்ளத்தில் அமைதி தரவேண்டுமையா
உயர்வான வாழ்க்கையினைத் தாருமையா
வெள்ளத்தில் துடுப்பில்லா படகைப்போல
விதியென்று அலைகின்றேன் வீணாய்நானும்
முள்ளான பாதையிலே நடக்க வைத்து
முன்வினையால் எனைவாட்டி வதைத்திடாமல்
தெள்ளுதமிழ் வில்லூன்றிப் பதியில் வாழும்
திருமலைக் கந்தையா அருள் செய்வாயே! 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடறுத்து வருகின்ற வெள்ளம்போல
உருமாறி வருகின்ற மாயை தன்னில்
மூடனாய் தினம் மூழ்கி மாழுகின்றேன்
மீளுகின்ற நல்வழியைக் காட்டுமையா
தேடவே உன்னுடைய திருவடியை
தெளிவான ஞானத்தை வேண்டி நின்றேன்
பாடல்சேர் வில்லூன்றிப் பதியில் வாழும்
பரந்தாமன் மருகோனே அருள்செய்வாயே! 7

எடுத்தபணி ஈடேறும் வரங்கள் வேண்டும்
என்றுமொரு துயரின்றி வாழவேண்டும்
அடுத்துவரும் சந்ததிகள் இந்தமண்ணில்
அமைதியுடன் வாழ ஒரு தீர்வு வேண்டும்.
தடுத்தெமது வினைகளெல்லாம் காக்கவேண்டும்.
தர்மநெறி தவறாமல் வாழவேண்டும்
கொடுக்கின்ற வில்லூன்றிப் பதியில் வாழும்
கோலவள்ளி நாயகனே அருள்செய்வாயே! 8

பொது நூலகம் நகராட்சி மன்றம்

ஏழையென்மேல் நீயிரங்க வேண்டுமையா
ஏற்றமுடன் வாழவழி செய்யுமையா
கோழையின்றி நான் விளங்க வேண்டுமையா
கொண்டகொள்கை செயல்துலங்க வேண்டுமையா
வேளையெல்லாம் வேண்டியுனை வருமெனக்கு
விருப்புடன் என்மீதுன் பார்வைகாட்டி
வாழைசேர் வில்லூன்றிப் பதியில் வாழும்
வேழமுகன் சோதரனே அருள் செய்வாயே! 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரனுக் கிளையவனே சரணமையா
அகிலமெல்லாம் ஆள்வோனே சரணமையா
மெய்ஞானப் பொருளோனே சரணமையா
மேலான தத்துவனே சரணமையா
அஞ்ஞான இருள் நீக்கி அடிமையென்னை
ஆட்கொள்ள வேண்டுமென வேண்டுகின்றேன்
உய்ய வைக்கும் வில்லூன்றிப் பதியில் வாழும்
உமையீசன் பாலகனே அருள்செய்வாயே! 10

ஒருமனதாய் உலகத்தில் வாழச் செய்வாய்
உன் நினைவில் எப்போதும் இருக்கச் செய்வாய்
வருகின்ற தடையெல்லாம்அகலச் செய்வாய்
வாடாத நிலையினிலே திகழச் செய்வாய்!
கருகின்ற வாழ்வுதனை நீயும் மாற்றி
கதறுகின்ற மானிடர்கள் துயரைப் போக்கி
தருகின்ற வில்லூன்றிப் பதியில் வாழும்
தமிழ்க் கடலே முருகையா அருள் செய்வாயே! 11

ஓமென்ற பிரணவத்தின் விளக்கம் கேட்டு
உருவாக்கும் பிரமனையே சிறையில் வைத்தாய்
தானென்ற ஆணவத்தால் ஆடுவோர்க்கு
தக்கதொரு பாடத்தைத் தான்கொடுப்பாய்
நானென்ற செயல் நீக்கி அனைத்துமுந்தன்
நடவடிக்கை என்றுன்னைத் தேடுகின்றேன்
தேனென்ற வில்லூன்றிப் பதியில்வாழும்
தேடுகின்ற வேலவனே அருள்செய்வாயே ! 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவியம் இன்றிநான் வாழவேண்டும்
அனைவருக்கும் நல்லவனாய் இருக்கவேண்டும்
ஔதரனாய் எனையேற்றுக் கொள்ளவேண்டும்
அனைத்தையும் தாங்குமொரு சக்தி வேண்டும்
கௌமார குடும்பத்தில் பிறந்ததாலே
கதியென்று உனைத்தேடி வாறேனப்பா
சௌக்கிய வில்லூன்றிப் பதியில் வாழும்
சக்தி வடிவேலவனே அருள்செய்வாயே ! 13

சொல்விளக்கம்: ஔவியம் : பொறாமை தீவினை
ஔதரன் : சொந்த மகன்
கௌமார குடும்பம் : முருகனை வழிபடும் குடும்பம்

கலியுகவரதனே கந்தா வேலா
கானக வள்ளியை மணந்த தேவா
பலியாடாய் மாழுகின்ற மாந்தருக்கு
பாதையினை நீகாட்டி அருள்வதென்றோ?
வலிந்துவரும் சண்டைதுயர் வலியைப்போக்கி
வையகத்தில் மானிடர்கள் நலமாய் வாழ
பொலிவான வில்லூன்றிப் பதியில்வாழும்
பொன்னழகுக் குமரையா அருள்செய்வாயே ! 14

காலையிளம் கதிர்போல காட்சி நல்கி
கதிரமலை மீதமர்ந்த கார்த்திகேயா
ஆலையிலே அகப்பட்ட கரும்புபோல
அடிமையுற்று எமது இனம் யாவுமற்று
சாலையிலே கிடக்கின்ற சக்கையானார்
சக்திபெற உன்னருளை வேண்டுகின்றேன் !
மாலைகள் சேர் வில்லூன்றி வாழும்
மாதவனின் மருகோனே அருள்செய்வாயே ! 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளைதாவும் குரங்குபோல் எந்தன் நெஞ்சம்
கீழான ஆசைகளில் மோதா வண்ணம்
களைபோல வாழ்வோர்கள் தீயநட்பில்
கடசிவரை நான் மூழ்கித் தவியாவண்ணம்
விளைந்தநல் முத்தாகச் சிறப்புற்றோங்கி
விளக்காக வையகத்தில் திகழ்ந்து வாழ
தளைத்தோங்கும் வில்லூன்றிப் பதியில் வாழும்
தமிழ்வடிவே முருகையா அருள் செய்வாயே ! 16

கீர்த்தனைகள் பலநூறு பாடியுந்தன்
கீர்த்திமிகு பொற்பாதம் தேடிவந்தேன்
நேர்த்தியுடன் பலகோயில் தலங்கள் சென்று
நெஞ்சாற உனைவேண்டித் தொழுதுவந்தேன்
ஆத்திரத்தால் அறிவிழந்து அடியேன்நானும்
அடுத்தவர்கள் பழிசொல்லுக்காளாகாமல்
காத்தருளும் வில்லூன்றிப் பதியில் வாழும்
கார்த்திகை பாலகனே அருள்செய்வாயே ! 17

குளக்கோட்டு மன்னவனும் ஆண்டு வாழ்ந்து
கோயில்குளம் பலகட்டித் திகழ்ந்த மண்ணில்
பழங்காலப் பெருமைகள் பலதைத் தாங்கும்
படியளக்கும் கோணேசர் பூமி தன்னில்
வழக்கமாய் உனைவேண்டி வாழும் மக்கள்
வாடுகின்ற போராட்டத் துயரை மாற்றி
விளங்குமுயர் வில்லூன்றிப் பதியில் வாழும்
வெற்றிவடிவேலவனே அருள்செய்வாயே ! 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுகின்ற அடியார்கள் உந்தன்நாமம்
குறையாமல் உச்சரித்துத் தேடுகின்றார்
பாடுகின்ற பக்தர்குலம் அருளைநாடி
பண்ணிசையால் உனைப்போற்றி வேண்டுகின்றார்
வாடுகின்ற மாந்தருக்கு பாதைகாட்டி
வாழ்வதற்கு நல்லதொரு தீர்வைத்தந்து
தேடுகின்ற வில்லூன்றிப் பதியில் வாழும்
தென்கதிரை வேலவனே அருள்செய்வாயே ! 19

கெடுதிகள் இல்லாது இந்த மண்ணில்
குறைவின்றி மானிடர்கள் வாழவேண்டும்
படுகொலை வெறியாட்டம் அகன்றுநல்ல
பண்பாடு தர்மங்கள் வாழவேண்டும்
நடுநீதி கேட்கின்ற மாந்தருக்கு
நல்லபடி வாழுகின்ற விடிவைத்தந்து
தொடுமழுகு வில்லூன்றிப் பதியில் வாழும்
தோகைமயில் வாகனனே அருள்செய்வாயே ! 20

கேவலமாய் வாடுகின்ற தமிழருக்காய்
கேட்கின்றேன் நெடுநாளாய் வாழ்வு ஒன்றை
காவலனாய் இருக்கின்ற கந்தா வேலா
கதியென்று வருவோரைக் காருமையா !
சாபமொடு பாவங்கள் நீக்கி எங்கள்
சந்ததிகள் குறையின்றி வாழ்வதற்கு
பாவலர்சூழ் வில்லூன்றிப் பதியில் வாழும்
பாராளும் சண்முகனே அருள் செய்வாயே ! 21


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளவு இதயத்தில் சுமைகள் கூடி
கடும்துயரம் எனைவந்து வாட்டுதையா !
மெய்யழகு வேலவனே விரைந்துவந்து
மேலான வாழ்க்கையினைத் தாருமையா
பொய்யான உடல்கொண்டு பூமிதன்னில்
போலியிலே மதிமயங்கி வாடுகின்றேன்
செயல்மிகு வில்லூன்றிப் பதியில் வாழும்
செந்தில்வடிவேலவனே அருள் செய்வாயே ! 22

கொத்தடிமைபோல் தமிழன் வாடும்போது
கொடும்தீயில் இத்தேசம் வேகும் போது
யுத்தவெடி அவலங்கள் தொடர்ந்து செல்ல
செத்தபடி ஓர் சமூகம் மறைந்து செல்ல
நித்தமுனை வேண்டுகின்றேன் விடிவைக் கேட்டு
நிலையான சமாதான வாழ்வைத் தந்து
சித்தம்நிறை வில்லூன்றிப் பதியில் வாழும்
சித்துநிறை வேலவனே அருள்செய்வாயே ! 23

கோயில் குளம் பலகொண்டு திகழுமெங்கள்
கோணேசர் பூமியினை ஆளும் கந்தா
தாயிலும் மேலான கருணை கொண்டு
தாங்கியே அடியவரைக் காக்கும் வேலா
வாய்மனத்தால் உன்நாமம் உச்சரித்து
வணங்கிவரும் அன்பர்கள் துயரைப் போக்கி
தூய்மையுள்ள வில்லூன்றிப் பதியில் வாழும்
தொண்டர் சூழ் சண்முகனே அருள்செய்வாயே ! 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனார் திருமகனே பாருமையா
சக்தியத்தை நாட்டியெம்மைக் காருமையா
தங்கமயில் ஏறியிங்கு வாருமையா
தமிழர்படும் கொடும்துயரைத் தீருமையா
பங்கமின்றி எமதுகுலம் வாழ்வதற்கு .
பலநாளாய் உனைவேண்டிப் பாடுகின்றேன்
தெங்கு வளர் வில்லூன்றிப் பதியில் வாழும்
தேன்தமிழ் தெய்வமே அருள்செய்வாயே ! 25

சாந்தியுடன் சமாதானம் நிலைக்க வேண்டும்
சக்தியம் வெற்றிபெற்றுத் திகழவேண்டும்
நீந்திடுவோர் துயர்கடலை மாற்ற வேண்டும்
நிலையான நல்வாழ்வை நல்க வேண்டும்
ஏந்திடுவோர் வாழ்க்கையிலே நன்மைகாட்டி
இன்பமுடன் அனைவரையும் வாழச்செய்து
காந்தமுள்ள வில்லூன்றிப் பதியில் வாழும்
கதிர்வேலா ஓடிவந்து அருள்செய்வாயே ! 26

சிரித்தமுகம் நேரில்நான் காண்பதெப்போ ?
சிந்தையது குளிரஎனை அணைப்பதெப்போ?
விரியழகுத் தோகைமயில் ஏறிஎங்கள்
வினைதீர்க்க விரைந்திங்கு வருவதெப்போ?
நெரித்தெம்மை வாட்டுகின்ற துயரைப் போக்கி
நிம்மதியாய் இவ்வுலகில் வாழச் செய்து
அரியதிரு வில்லூன்றிப் பதியில் வாழும்
அழகு வடிவேலவனே அருள் செய்வாயே ! 27

REFERENCE LIBRARY
Public Library



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறுகின்ற நாகத்தை அணியாய் கொண்ட
சிவனாரின் நெற்றியிலே ஒளியாய் தோன்றி
கூறுகின்ற அடியார்கள் குறையைத் தீர்க்கும்
குமரனாய் வந்துதித்த சக்தி வேலா
மீறுகின்ற கொடுமைகளை மாற்றியிங்கு
மானிடர்கள் வாழஒரு விடிவைக் காட்டி
தேறுகின்ற வில்லூன்றிப் பதியில் வாழும்
தேடுமெழிற் சண்முகனே அருள்செய்வாயே ! 28

சீகமான அழகுமிகு வடிவைத்தேடி
சுற்றியே உன்னுடைய தலங்கள் வந்து
பகல் இரவாய் உன்நாமம் உச்சரித்து
பணிந்து தினம் போற்றியே பாடுகின்றேன்
அகலாத போராட்டத் துயரில் வாழும்
அகதிகளை அன்புடனே விரைந்து காத்து
இகத்திலுயர் வில்லூன்றிப் பதியில் வாழும்
இனிய திருவேலவனே அருள் செய்வாயே ! 29

சொல்விளக்கம் : இகம் – உலகம் பூமி

சூழாது முன்செய்த வினைகளெல்லாம்
சுடர்வேலால் தாங்கியெனைக் காக்கவேண்டும்
பாழான ஆசைகளில் உள்ளம் தாவி
பரிதவிக்க செய்யாமல் பார்க்க வேண்டும்
கீழான வாழ்க்கையிலே வாடுவோருன்
கிருபையினால் கீர்த்தியுடன் வாழ்வதற்கு
தாழாத வில்லூன்றிப் பதியில் வாழும்
தணிகைவாழ் சண்முகனே அருள் செய்வாயே ! 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தூரவடிவழகா கதிரைவாசா
செந்தமிழில் உருவான செந்தூர் வேலா
சந்தமுடன் தமிழ்ப்பாடல் அடியேன்பாட
தானிரங்கி நல்வழியைக் காட்ட வேண்டும்
நிந்தையுடன் நெடுந்துயரில் வாடும்மாந்தர்
நிம்மதியாய் வாழுமொரு தீர்வை நல்கி
சிந்தைகவர் வில்லூன்றிப் பதியில் வாழும்
செல்வத்திருக் குமரேசா அருள் செய்வாயே ! 31

சேருகின்ற அடியார்கள் அன்போடுந்தன்
சேவைகள் பல செய்து வேண்டுகின்றார்
தீருகின்ற காலமென்றோ இந்தமண்ணில்
தீராத யுத்தவெறிக் கொடுமையெல்லாம்
நேருகின்ற பழிதுயர வாழ்வைப் போக்கி
நிலையான சமாதான விடிவைக் காட்டி
சாருகின்ற வில்லூன்றிப் பதியில் வாழும்
சக்தி வடிவேலவனே அருள்செய்வாயே! 32

சைவநெறிப் பணித்தொண்டால் உயர்ந்து நிற்கும்
தமிழ்கொஞ்சும் திருகோணமலையின் கண்ணே !
இசையாளர் அன்போடு ஒன்று கூடி
இனிய தமிழ் "பாவிசைத்து போற்றும் கந்தா
திசைமாறித் தினம்வாடித் திரியும் மாந்தர்
தெளிவோடு சுதந்திரமாய் வாழ்வதற்கு
அசையாத வில்லூன்றிப் பதியில் வாழும்
ஆறுமுக வேலவனே அருள்செய்வாயே ! 33

சொல்லுதமிழ் பாமாலை நாளும்பாடி
சுகமான உனதடியைத் தேடுகின்றேன்
கொல்லும்பகை வெறியுணர்வு இல்லாமண்ணில்
குறையின்றி வாழ வரம் வேண்டுகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லை துயரோடுதினம் வாடுமாந்தர்
தொல்லையின்றி நலமோடு சிறந்துவாழ
வெல்லும்திரு வில்லூன்றிப் பதியில்வாழும்
வெற்றிவடி வேலவனே அருள்செய்வாயே ! 34

சோகமே உருவாக எந்தநாளும்
தொல்லைமேல் தொல்லைதந்து வாட்டாவண்ணம்
தேகமே மெலிவாக நோயைத் தந்து
தூக்கமின்றி எனைவாட்டச் செய்யாவண்ணம்
தாகமே விடுதலை உணர்வாய்கொண்டு
தவிக்கின்ற தமிழருக்கு விடிவைக் காட்டி
ஆகம வில்லூன்றிப் பதியில் வாழும்
அழகுவடிவேலவனே அருள்செய்வாயே ! 35

தங்கவடிவேலவனே தமிழர் போற்றும்
தமிழ்க்கடலே தரணியெலாம் ஆளும் கந்தா
பொங்கும் நகை அழகோடு காட்சி தந்து
போற்றுகின்ற அடியவரைக் காக்கும் வேலா
இங்குபல துயரோடு வாடுகின்ற
உனதுகுல மானிடர்கள் துயரைப் போக்கி
மங்காத வில்லூன்றிப் பதியில் வாழும்
மாமணியே முருகையா அருள்செய்வாயே ! 36

தாங்கொண்ணாத் துயரத்தை தந்தெனக்கு
தவியாமல் தவிக்கவிட வேண்டாமப்பா !
தூங்கொண்ணாத் சோதனையைக் கொடுத்தெனக்கு
சோர்ந்துமனம் வாடியழச் செய்யாதப்பா !
நீங்காத குழப்பத்தில் வாடுவோர்க்கு
நிலையான தீர்வொன்றை விரைந்து காட்டி
தீங்கில்லா வில்லூன்றிப் பதியில் வாழும்
தெள்ளமுதே கந்தையா அருள் செய்வாயே ! 37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணமில்லா இவ்வுலகில் உயிரைத்தாங்கி
தினம் நூறு கொடுமைகளால் நொந்து வாடி
மண்ணோடு மானிடர்கள் மடியும் போது
மயிலேறும் சண்முகனே மௌனமேனோ?
கண்ணோடு மறையாத கொடுமைவாட்ட
கண்மூடி இருக்காமல் விரைந்து வந்து
பண்ணூறும் வில்லூன்றிப் பதியில் வாழும்
பன்னிருகை வேலவனே அருள்செய்வாயே ! 38

தீரமுள்ள இதயத்தைக் கேட்டேனப்பா
தீங்கின்றி வாழும் வரம் தருவாயப்பா
சாரமுள்ள தமிழ் பாடல் தந்து என்னை
சமூகத்தில் தலைநிமிரச் செய்வாயப்பா
பாரமுள்ள மனிதனாய் மற்றோருக்கு
பாவியென்னை வாட்டியிங்கு வதையாவண்ணம்
ஈரமுள்ள வில்லூன்றிப் பதியில்வாழும்
இணையில்லா வேலையா அருள் செய்வாயே ! 39

துதிபாடித் தொழுவோர்கள் துயரைப் போக்கி
துலங்கிடும் நல்வாழ்வைத் தருவாயப்பா
கதியென்று வருவோர்கள் கவலையின்றி
கடமைகளைச் செய்யவழி செய்வாயப்பா
விதியென்று வாடுவோர் வினையைப் போக்கி
வெற்றியுடன் சிறந்தோங்கி வாழ்வதற்கு
மதியோங்கும் வில்லூன்றிப் பதியில் வாழும்
மனம்கவர் சண்முகனே அருள் செய்வாயே ! 40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டாத விளக்காக வாழுகின்றேன்
துலங்குமொரு நல்வழியைக் காட்டுமையா
வேண்டாத தீயவர்கள் நாடிவந்து
வேதனையைக் கொடுக்காமல் காருமையா
ஆண்டாண்டு காலமாய் உன்னை வேண்டி
அழுகின்ற மானிடர்கள் துயரைப் போக்கி
தீண்டுமருள் வில்லூன்றிப் பதியில் வாழும்
திருக்குமரா ஓடிவந்து அருள்செய்வாயே ! 41

தெளிந்தமனம் நல்லமதி தருவாயப்பா
தினமுன்னைப் பாடும்வரம் அருள்வாயப்பா
ஒளிதந்து உளம் குளிரச் செய்வாயப்பா
ஒருகுறையுமில்லாமல் காப்பாயப்பா
இழிவுற்று வாடுவோர் இடர்கள் நீங்கி
இன்பமாய் எல்லோரும் வாழ்வதற்கு
வழிகாட்டும் வில்லூன்றிப் பதியில் வாழும்
வடிவேலா வந்தெமக்கு அருள்செய்வாயே ! 42

தேடிவரும் அடியார்கள் துயரைப் போக்கி
தெளிவான வாழ்வுதரும், கடம்பா, கந்தா
பாடிவரும் பக்தன்மேல் மனமிரங்கி
பரிவுடனே கோலவிழிப் பார்வைகாட்டி
நாடிவரும் பழிதுயர வாழ்வை மாற்றி
நலமோடு பணிசெய்து அடியேன் வாழ
கூடிவரும் வில்லூன்றிப் பதியில் வாழும்
குறைதீர்க்கும் குமரையா அருள்செய்வாயே ! 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைரியமும் தளராத மனமும் கேட்டேன்
சகலதையும் தாங்குமொரு சக்தி கேட்டேன்
கையேந்தி பிறரிடத்தில் செல்லாவண்ணம்
காலமெலாம் உழைத்துவரும் பலத்தைக்கேட்டேன்
நெய்விளக்கை ஏற்றியுனை எந்தநாளும்
நெஞ்சார பக்தியுடன் வேண்டுகின்றேன்.
மெய்யான வில்லூன்றிப் பதியில் வாழும்
மெய்ஞானச் சண்முகனே அருள்செய்வாயே! 44

தொண்டர் சபை உனக்காக தொண்டுசெய்ய
தொடர்ந்து பல அடியார்கள் வேண்டிச் செல்ல
பண்டுதொட்டு வேதியர்கள் சூழ்ந்திருந்து
பக்குவமாய் பூசைபணிச் சேவை செய்ய
கண்குளிர அடியார்க்கு காட்சி தந்து
கரிமுகனாம் அண்ணனுடன் வீற்றிருந்து
தண்டமிழர் வில்லூன்றிப் பதியில் வாழும்
தண்டபாணித் தெய்வமே அருள்செய்வாயே ! 45

தோல்விகள் மேல் தோல்விகளால் துவழவைத்து
சோதித்து வாட்டியது போதுமையா
வேல்கொண்டு வேதனையைத் தீர்ப்பதற்கு
விரைந்தோடி நீயிங்கு வாருமையா
கால்பிடித்து உனது பணிசெய்து நாளும்
கடசிவரை காப்பாயென நம்புகின்றேன்.
பால்மணக்கும் வில்லூன்றிப் பதியில்வாழும்
பழனிமலை வேலவனே அருள்செய்வாயே ! 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (35) வில்லூன்றிக் கந்தன் தோத்திரக் கவசம்

### (வெண்பா)

வாட்டும் துயர்தீரும் வளங்கள் பலசேரும்
தீட்டும் செயலோடு சீர்மேவும் – பாட்டாம்
வில்லூன்றிக் கந்தனருள் கவசத்தை விரும்பி
சொல்லூன்றிப் பதிப்பார் தமக்கு!

### (அகவல்)

வில்லூன்றிப் பதிவாழ் முருகா போற்றி!
வினைகளைத் தீர்க்கும் வேலவா போற்றி!
பற்றிப் பிடித்தேன் உன் திருப்பாதம் !
பாவங்கள் போக்கும் உன் திருநாமம்!
வெற்றியைக் கொடுக்கும் வெற்றி வேலவனே!
சக்தியைக் கொடுப்பாய் சங்கரன் மகனே! 1

சங்கடம் போக்கும் சண்முகா போற்றி!
சாந்தியைக் கொடுக்கும் சரவணா போற்றி!
எங்கும் நிறைந்த இறைவா போற்றி!
எமக்கருள் செய்யும் குமரா போற்றி
வந்துனை வேண்டும் அடியார்க்கெல்லாம்
வரங்களை வழங்கும் குகனே போற்றி! 2

சிந்தை நிறைந்த திருமலை மண்ணை
தினமும் காக்கும் கடம்பா போற்றி!
முந்தை வினைகள் யாவும் போக்கும்
முத்துக்குமாரச் சுவாமியே போற்றி!
எந்த நாளும் உனைப் பணிவோர்க்கு
ஏற்ற வாழ்வைத் தருவாய் போற்றி! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை விழிகள் பன்னிரெண்டிலங்க
காக்கும் கதிரை வாசா போற்றி!
அருளை வழங்கும் ஆறிரு கரங்கள்
ஆறுமுகம் தோள் அமைந்தாய் போற்றி!
பெருமைக்குரிய வில்லூன்றிப்பதியில்
பணிவார்க்கருளும் பரனே போற்றி! 4

இருவினைத் துயரை இல்லாதொழிக்கும்
இணையில்லா அன்புக் கடலே போற்றி!
அருளைக் கொடுத்து அடியாரைக் காக்கும்
ஆனைமுகத்தோன் தம்பியே போற்றி!
உருகி வேண்டும் அடியார் துயரை
உடனேவந்து தீர்ப்பாய் போற்றி! 5

புள்ளி அழகு மயில் மீதேறி
புவனமளந்த புனிதா போற்றி!
வள்ளி தெய்வயானையோடிணைந்து
வரங்கள் வழங்குமழகா போற்றி!
பிள்ளைகள் செய்யும் பிழைகளைப் பொறுத்து
பேரின்ப வாழ்வைத் தருவாய் போற்றி! 6

தொல்லைகளில்லா வாழ்வைத் கொடுத்து
தொண்டர்கள் நலனைக் காப்பாய் போற்றி!
எல்லைகளில்லா அற்புதம் செய்து
என்றும் எம்மைக் காப்பாய் போற்றி!
நல்லோர் மனதில் குடிகொண்டிருந்து
நல்லருள் பொழியும் நாதா போற்றி! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கெமை வாட்டும் நோய்பினியாவும்
இல்லாதொழிக்கும் இறைவா போற்றி!
பொங்கும் பூத கணங்களையெல்லாம்
பிடிக்குள் அடக்கும் முத்தையா போற்றி!
தங்கும் தடைகள் குறைகளைப் போக்கும்
தங்கவடிவேல் குமரா போற்றி! 8

ஓமென்ற தத்துவப் பொருளே போற்றி!
ஓம் சக்தி பெற்ற தீரனே போற்றி!
ஓமென்ற பிரணவப் பொருளைக் கேட்டு
உருவாக்கும் பிரமனை சிறையினிலடைத்து
நானென்ற ஆணவம் அகற்றினாய் போற்றி!
நான்முகனுக்கும் மேலவா போற்றி! 9

வேதங்கள் போற்றும் வித்தகா போற்றி!
விளங்கும்கருணைக் கடலே போற்றி!
மாதவன் மருகா மாமலை வாசா
மக்களைக் காப்பாய் சிவகுருநேசா!
பாதம் பணிந்தேன் பாவங்கள் போக்கி!
பதமலர் காணும் பாக்கியமருள்வாய்! 10

கார்திகை பாலா கடம்பா போற்றி!
கானக மாந்தர் தலைவா போற்றி!
நேர்த்தியாகத் தொழுதிடுவோர்க்கு
நிம்மதி நலங்கள் தருவாய் போற்றி!
ஆர்த்த பிறவித் துயரைப் போக்கி
அழியா முத்தி தருவாய் போற்றி! 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரனைக் கொன்ற சுப்பையா போற்றி!
சுகங்களை நல்கும் கந்தையா போற்றி!
வீரம் செறிந்த வேலையா போற்றி!
வேண்டும் வரங்கள் தருவாய் போற்றி!
தீராவினையைத் தீர்த்தருள் புரியும்
தீரமிக்க இறைவா போற்றி! 12

தேவர்கள் அடிமைத் துயரைப் போக்கி
தேடும் விடுதலை கொடுத்தாய் போற்றி!
ஆவலர் கூடிப் பணிசெய்து போற்றும்
அழகிய திருமலைக் கந்தா போற்றி !
ஏவலனாக உன்பணி தொடர்வேன்
ஏழையைக் காப்பாய் எம்பெருமானே! 13

சேவல் கொடியைத் தாங்கிய தேவா
செந்தூர மார்பா சேவடி போற்றி!
பாவலர் போற்றும் பண்டிதா போற்றி!
பால்பழம் தேனால் குளிப்பாய் போற்றி!
காவலின்றி வாடிடுவோர்க்கு
காவலாய் விளங்கும் கதிர்வேலா போற்றி! 14

ஆதியாய் விளங்கி அடியாரைக் காக்கும்
ஆறுமுகனே ஐயா போற்றி!
சோதியாய் தோன்றி சுகங்களை வழங்கும்
சுப்பிரமணிய சுவாமியே போற்றி!
நீதியை நாட்டி எங்களைக் காத்து
நிலையான வாழ்வு தருவாய் போற்றி! 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைவீடோடு பல்வேறு தலங்கள்
பாரெங்கும் பெற்ற குருபரா போற்றி!
தடைகளை நீக்கி உயர்வைக் கொடுக்கும்
தண்டபாணித் தெய்வமே போற்றி!
அடைக்கலம் தேடி வருவோர்க்கெல்லாம்
ஆதரவளிக்கும் ஐயனே போற்றி! 16

தாய்தந்தையாக இருந்தெமைப் பார்த்து
தாங்கிடும் அன்புச் சுந்தரா போற்றி!
நோய் துயரின்றிக் காத்தெமை நாளும்
நிம்மதி நல்கும் நித்தியா போற்றி!
சேய்களின் வாழ்வைச் சீராய் மாற்றி
சிறந்திடச் செய்யும் செவ்வேள் போற்றி! 17

உலகம் யாவும் நிறைந்தாய் போற்றி!
உயிர்கள் யாவும் காப்பாய் போற்றி!
பலதும் அறிந்த பரமஞானப்
பாலகுமாரா பதமலர் போற்றி!
நலமும் பலமும் நாடினர்க்கருளும்
நல்லூர் நற்பதி நாயகா போற்றி ! 18

பழனி தணிகைப் பதிவேல் போற்றி
பழமுதிர்ச்சோலை நிதியே! போற்றி!
அழகுச் செந்தூர் அரசே போற்றி!
அன்பின் உருவே அமுதே போற்றி!
இளமையாக என்றுமிருந்து
இனிய வாழ்வைத் தருவாய் போற்றி! 19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிக்கு அருளைக் கொடுத்து
திருப்புகழ் பாடச் செய்தவா போற்றி!
பெருமைக்குரிய ஞானியரெல்லாம்
போற்றிப் பணியும் புனிதா போற்றி!
இருளைப் போக்கி ஒளியைக் கொடுக்கும்
ஈசன் நெற்றிச் சுடரே போற்றி! 20

தேசம் போற்றும் தெய்வமே போற்றி!
தேடும் அடியார்க்கருள்வாய் போற்றி!
பாசம் காட்டும் பாலா போற்றி!
பக்தி முத்தி தருவாய் போற்றி!
ஈசன் உமையாள் சுதனே போற்றி!
ஈரேழ் உலகும் ஆள்வாய் போற்றி! 21

வேங்கை மரமாய் நின்றாய் போற்றி!
வேடர்கள் பணியச் செய்தாய் போற்றி!
மாங்கனிக்காக உலகம் யாவும்
மயிலேறி வலமாய் வந்தாய் போற்றி!
தேங்காய் சிதற உடைத்துனைப் பணிவோர்
தேவைகள் யாவும் தருவாய் போற்றி! 22

தேரில் அழகாய் தான்வலம் வந்து
நேரில் எமக்கு அருள்வாய் போற்றி!
ஊரில் வறுமை பிணிசேராமல்
உயிர்களைக் காக்கும் உத்தமா போற்றி!
பாரினிலுன்னைப் பணிவோர்க்கெல்லாம்
பாக்கியமெல்லாம் தருவாய் போற்றி! 23

பொது நூலகம்
நகராட்சி மன்றம்
உசாத்துணை நூலகம்
REFERENCE LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனையெல்லாம் களைவாய் போற்றி!
வேதனையெல்லாம் தீர்ப்பாய் போற்றி!
சாதனை படைக்கச் செய்வாய் போற்றி!
சத்தியம் வெல்லச் செய்வாய் போற்றி!
பாதகச் செயலை அழிப்பாய் போற்றி!
பரமதயாளக் குருவே போற்றி! 24

சிங்கார வேலா சிவகுகா போற்றி!
சித்தர்கள் போற்றும் சித்தனே போற்றி!
மங்களம் நல்கும் மணியே போற்றி!
மலைகளை ஆளும் மயூரா போற்றி!
பங்கமில்லாமல் காத்தருள் புரியும்
பன்னிரு தடந்தோள் வள்ளலே போற்றி! 25

ஆங்கார இருளை அழிப்பாய் போற்றி!
அடிமை வாழ்வை ஒழிப்பாய் போற்றி!
ஓங்காரவடிவே உயிரே போற்றி!
உள்ளம் குளிரச் செய்வாய் போற்றி
தீங்கில்லா வாழ்வைத் தருவாய் போற்றி!
திருக்கோணமலை வாழ் தெய்யனே போற்றி! 26

பாங்காய் காவடி கரகம் கும்மி
பார்த்து ரசிக்கும் பழமே போற்றி!
தாங்கி உலகைக் காத்தருள் செய்யும்
தமிழர்கள் போற்றும் தேசிகா போற்றி!
நீங்கா அழகுக் குமார போற்றி!
நிந்தனையின்றிக் காப்பாய் போற்றி! 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூர தீப ஆராதனைகள்
கண்ணைக் கவரும் ஒளி தீபங்கள்
அற்புதம் நிகழ்த்தும் ஐயா உனக்கு
அன்பாய் படைக்கும் அபியாகங்கள்
எப்போதுமேற்று எமக்கருள் செய்வாய்
என்று முந்தன் திருவடி சரணம்! 28

பொழியும் அழகுப் பூமுகத்தோடு
பொன்னாய் மின்னும் வண்ணங்களோடு
வழியைக் காட்டும் வடிவழகான
அழியா அழகுச் செல்வமே முருகா
ஒளியாய் தோன்றும் உயரிய முதல்வா
எமையென்றும் காப்பாய் உனதடி சரணம்! 29

விரிந்த மார்பும் வேல் விழியழகும்
விளங்கும் நுதலில் வெண்ணீற்றழகும்
தரித்த நகையும் தாமரை முகமும்
ததும்பும் வண்ணத் தண்டைகள் சிலம்பும்
சிரித்த இதழும் சிவந்த நிறமும்
சிந்தையில் கொண்டால் அச்சம் தீரும்! 30

எண்ணத்தில் நல்ல எண்ணத்தை வைத்து
எந்நாளும் கந்தன் பணிகளையேற்று
வண்ணத் தமிழ்தேன் கவசமிதனை
வாய் மனதாறப் பாடிடுவோர்க்கு
திண்ணமாய் நன்மை நலங்கள் சேரும்!
தீவினை யெல்லாம் மறைந்து போகும் 31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூப்பாய் பிணியாய் நான்வாடாமல்
மூழ்கும் துயரில் உடல் சாயாமல்
சேர்ப்பாய் எனையுன் திருவடி நிழலின்
சேர்ந்தார்க்கருளும் கழலடி சரணம்!
ஏற்பாய் ஏற்பாய் என் பிழைபொறுத்து!
எப்போது முந்தன் இணையடி சரணம்! 32

வருவாய் வருவாய் வடிவேலவனே!
வாட்டம் தீர்க்கும் சிவபாலகனே!
தருவாய் அருளைக் கருணாகரனே
தமிழாய் அமுதாய் உருவானவனே!
குருவாய் அருளும் குருவானவனே!
குறையைத் தீர்ப்பாய் வேலாயுதனே! 33

காப்பாய், காப்பாய் கதிர்வேலவனே!
கலைகளுக்கெல்லாம் கருவானவனே!
பார்ப்பாய் பார்ப்பாய் படைத்தவன் நீயே!
பக்தரைக்காக்கும் தண்டாயுதனே!
தீர்ப்பாய், தீர்ப்பாய் அடியவர் துயரை
திக்கெட்டும் காக்கும் திடந் தோளரசே! 34


சரணம் அடைந்தேன் உன் திருவடியில்
சகலதும் வழங்கும் சக்திய உருவில்!
கருணையைக் காட்டும் கந்தனே சரணம்
காலனை விரட்டும் கடம்பனே சரணம்
அருள் மழை பொழிந்து அன்பரைக் காத்து
வரும் துயர் தீர்க்கும் வானவா சரணம் ! 35


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் ஐந்தும் பணிசெய்து போற்ற
வேதங்கள் ஓதி வேதியர் வேண்ட
பாதங்கள் இரண்டைப் பங்கையம் தாங்க
பக்தர்கள் கூடி பாக்களை ஓத
மாதவன் மருகா மயிலேறி அருள்வாய்
மலரடி என்றும் சரணம், சரணம் 36

விஷங்கள் வந்தாலும் விலகிடச் செய்வாய்
வசமாய் யாவும் வந்திட அருள்வாய்
எதையும் தாங்கும் சக்தியைத் தருவாய்
எனைவழி நடத்தித் துணையாய் வருவாய்
சிதையும் வாழ்வைச் சீர்பெறச் செய்வாய்
சித்திரவேலா சீரடி சரணம்! 37

சரணம் சரணம் சங்கரன் மகனே!
சரணம் சரணம் சரவண பவனே!
சரணம் சரணம் சக்திவேலவனே!
சரணம் சரணம் சையொளிபவனே!
வேண்டுவோர்க்கருளும் வேலவா சரணம்
வில்லூன்றிப் பதிவாழ் சண்முகாசரணம் 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (36) வில்லூன்றிக் கந்தன் திருப்பள்ளி எழுச்சி

பனிவிழும் காலைப் பொழுதினிலெழுந்து
பரிசுத்தமாக குளிர்த்து நீராடி !
வனிதையர் வீடு வாசலைப் பெருக்கி
வண்ணக் கோலங்கள் வாசலிலமைத்து !
இனிதுற உந்தன் திருவருள் நாடி
இணையில்லா உன்னைக் காணவே வந்தார்
கனிவளர் வில்லூன்றிப் பதியினில்வாழும்
கந்தனே பள்ளி எழுந்தருள்வாயே! 1

காலையிளம் தென்றல் இதமாய்த்தடவ
கவர்ந்திடும் மலர்கள் வாசனை வீச
சோலை இளம் குயில் பறவைகள் யாவும்
சுகமாய் இன்னிசை ராகங்கள் மீட்க
வாலைப்பருவ இளையோர், முதியோர்
வந்துனை வேண்டி வரம்கேட்டு நின்றார்!
வேலைப்பிடித்து வில்லூன்றி வாழும்
வேலவனே பள்ளி எழுந்தருள்வாயே! 2

கதிரவன் கிழக்கில் கதிரொளி பரப்ப
கறவைகள் கன்றைக் தேடியே செல்ல
பதியினரெழுந்து பணிவிடைசெய்து
பக்குவமாகப் பூக்களைப் பறித்து
புதியநல் மாலை உனக்கெனத் தொடுத்து
போற்றியே பாடிப் பணிந்திடவந்தார்
விதியினை மாற்றும் வில்லூன்றிவாழும்
வேலவனே பள்ளி எழுந்தருள்வாயே! 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவலும் மயிலும் சேர்ந்தொலி எழுப்ப
செந்தமிழ் பாவினை பக்தர்களிசைக்க
தேவர்கள் முனிவர்கள் சேர்ந்துனைத் துதிக்க
தேவார பதிகங்கள் தேன்மழை சிந்த
ஆவலாய் பணிசெய்யும் அடியவர் கூடி
ஆலயம்தேடி அருள்பெற வந்தார்
காவலாய் விளங்கும் வில்லூன்றி வாழும்
கந்தனே பள்ளி எழுந்தருள்வாயே 4

ஆரவாரங்கள் ஆயிரம் நிகழ
அம்புலி மறைய ஆதவ னெழுந்தான்
தாரகைக் கூட்டம் தன்வழிபோக
தாமரை பூக்கள் தான்மலர்ந்தாக
வீரர்கள் தேகப் பயிற்சிகள் செய்ய
வித்தகர் ஞானிகள் விருப்போடு வந்தார் !
தீரர்கள் சூழ்திரு வில்லூன்றி வாழும்
தேசிகனே பள்ளி எழுந்தருள்வாயே ! 5

ஆலையில் பணிசெய்யும் அன்பர்கள் பாதி !
அலைகடல் நோக்கி செல்வோர்கள்பாதி !
காலையில் கல்வியை கற்போர்கள் பாதி !
கடமைக்கு விரையும் வணிகர்கள் பாதி !
வேலைக்கு சென்றிடும் அனைவரும் கூடி
வேண்டிட வந்தார் உன்னருள் நாடி
வாழைகள் வளர்திரு வில்லூன்றி வாழும்
வேலவனே பள்ளி எழுந்தருள்வாயே ! 6

பூதங்களைந்தும் பணி செய்து வாழ்த்த
பூவையர் வந்தொளி தீபங்களேற்ற
வேதங்களோதி வேதியர் போற்ற
விரிகடலெழுந்து வேண்டுதல் செய்ய
பாதக்கமலம் பணிந்திடும் அடியார்
பாவங்கள் போக்கும் உனைத்தேடுகின்றார்
வேதனை தீர்க்கும் வில்லூன்றிவாழும்
வேலவனே பள்ளி எழுந்தருள்வாயே ! 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டர்கள் உனக்கெனும் தொழும்புகள் செய்வார்!
தொடர்ந்துபல்லடியவர் வந்திங்கு செல்வார்
கண்கவாழகுக் கருணையின் வடிவே!
கலியுறு திருமலைக் கந்தனே கடம்பா!
வண்ணமலர்கள் உந்தனக்கீந்து
வாய்மனதாற வணங்கிட வந்தோம்
விண்ணவர் தேடும் வில்லூன்றி வாழும்
வேலவனே பள்ளி எழுந்தருள்வாயே! 8

வள்ளி தெய்வானை துணைவியரோடு
வந்தெமைக்காத்து வரம் தரும் முருகா!
தெள்ளிய ஞானச் சுடரே வடிவே!
தேவர்கள் மானம் காத்தநற் கனியே!
அள்ளிவழங்கும் அருள்மழை யமுதே!
ஆறிரு தடந்தோள் உடையநற்குகனே!
உள்ளத்தை ஈர்க்கும் வில்லூன்றிவாழும்
உத்தமனே பள்ளி எழுந்தருள்வாயே! 9

ஆதியாம் ஈசன் அம்மையும் வாழும்
அருள்மிகு அழகுத் திருக்கோணமலையில்
சோதியாய் தோன்றும் சுந்தரவேலா
சுகங்களை நல்கும் சிவசக்திபாலா
சேதிகள் நூறு செப்பிடும் மாந்தர்
செயலது விளங்கத் தேடிவந்தார்கள்
வேதியர் சூழ்திரு வில்லூன்றி வாழும்
வேலவனே பள்ளி எழுந்தருள்வாயே! 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (37) விநாயகர் ஊஞ்சல் பாடல்கள்

அன்புநிறை ஈசனுமை இறையருள் தங்கும்
அரியபெரும் அழகுநிறை திருக்கோணமலையில்
இன்பம் நிறைவான திரு வில்லூன்றிப் பதியில்
அகத்தியர் துதிசெய்த ஆதி கணபதியே!
நன்றாக உனைப்பாடும் பாவலர்கள் வரியில்
நானுமொரு சிறுபிள்ளை பாடவருகின்றேன்!
உன்னருளால் உனைப்போற்றி ஊஞ்சலிசைபாட
உமைதந்த திருமகனே எமையென்றும் காப்பாய்! 1

விண்ணவரும் மண்ணவரும் விருப்போடுபணியும்
வித்தகா வேழமுக நாயகா போற்றி !
கண்ணான காரியம் அத்தனையு முந்தன்
கழலடி பணிந்துதான் தொடங்குவாரன்பர் !
பண்ணோடு "பா"மாலை பாடியுனக்களித்து
பக்தியுடன் பாதமலர் பணிந்தேற்றி வந்தோம்
வண்ணம்மிகு வில்லூன்றிப் பதியினில் வாழும்
வரந்தரும் விநாயகனே ஆடுக பொன்னூஞ்சல் 2

LIBRARY
Public Library,

சந்தண வாசமரம் பலகையென்றாக
சரியை முதல் நான்குவழி கயிறாய் விளங்க
அந்தரத்து விண்மீன்கள் அணிகளாய் துலங்க
அம்புலியும் செங்கதிரும் அழகுச் சுடரேற்ற
இந்திரனும் தேவர்களும் இன்பமலர் தூவ
இணையில்லா முனிவர்களும் ஞானியரும் போற்றும்
கந்தனுடன் வில்லூன்றிப் பதியினில் வாழும்
கறுத்த விநாயகனே ஆடுக பொன்னூஞ்சல் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் தென்றல் இதமாகச் சாமரம் வீச
இளமாதர் மலர்கொண்டு உனதடியைப் போற்ற
வளமான அணியழகு வண்ணங்கள் சிந்த
வரம்கேட்டு அடியார்கள் வணங்கியுனைத்தேட
உளமாற வேண்டுவோர் உள்ளத்தில் வாழும்
உயர்வான செயலுக்கு முதலான முதல்வா!
தளமான வில்லூன்றிப் பதியினில் வாழும்
தங்க விநாயகனே ஆடுக பொன்னூஞ்சல் 4

அம்பிகை அரனுக்கு மூத்த மகனாக
அவனியிலே அதிகதலம் உடைய பெருமானே!
தம்பிக்கும் தனதருகில் இருக்க இடமீந்து
தனைத் தேடி வருவோருக்கு அருள்வாரித்தந்து
தும்பிக்கை கொண்டுதுயர் தீர்க்கின்ற இறைவா
தேவாதி தேவரெலாம் துதிக்கின்ற தலைவா!
நம்பிக்கை யானதிரு வில்லூன்றி வாழும்
நவசக்தி கணபதியே ஆடுக பொன்னூஞ்சல்! 5

அஞ்சாத உனக்காக அட்டதிக்கு வேந்தர்
ஆனபணி சேவைகள் அத்தனையும் செய்ய
பஞ்சமா பூதங்களை வயிற்றுக்குளடக்கி
பணிவிடைகள் செய்விக்கும் பார்வதி மகனே!
நெஞ்சழகை மெருகேற்றும் நித்திலங்கள் மின்னும்
நீண்டபுரி மாலையெழில் வாசனைகள் வீசும்
வஞ்சமில்லா வில்லூன்றிப் பதியினில் வாழும்
வேழமுக நாயகனே ஆடுக பொன்னூஞ்சல். 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேளமொடு நாதமும் விருந்தாயி சைக்க
மேவும் ஒளிதீபங்கள் அழகாய் விளங்க
தாளமொடு தமிழிசை தவழ்ந்தினிமை நல்க
தங்கநிற ஆடைகள் தகதகத்தாட
ஆழமிகு பக்தியில் அடியார்கள் மூழ்கி
அன்போடு உன்நாமம் உச்சரித்தேற்ற!
வாழவழி தருகின்ற வில்லூன்றி வாழும்
வேழமுக நாயகனே ஆடும் பொன்னூஞ்சல்! 7

நோக்கும் பலவிழி கூடி நின்னருளைத்தேட
நூதனமாய் வேதங்களை வேதியர்களோத
பூக்கள் பல கொண்டுன்னை புவிமாந்தர் போற்ற
பூவையரும் ஆடவரும் பிடித்ததைக் கேட்க
ஆக்கங்கள் உருவாக்க அருள்மாரி பொழியும்
ஆனைமுகம் ஐந்துகர முடையவா போற்றி
காக்கும் திரு வில்லூன்றிப் பதியினில் வாழும்
கற்பக விநாயகனே ஆடுக பொன்னூஞ்சல்! 8

ஆனைமுகம் அருள்மேவும் ஐந்துகரமாட
அங்குச பாசமுடன் அணிமௌலி யாட
பானை வயிற்றிடையோடு பத்தர்குலமாட
பாதமலர்ச் சிலம்புகள் பண்ணிசைந்தாட
வீணைமகள் வீணையினை மீட்டி இசைபாட
விளங்கும் திருமகள் துர்க்கை விருந்துகளைநல்க
தேனைத்தரும் வில்லூன்றிப் பதியினில் வாழும்
தேடுமருட் கணபதியே ஆடுக பொன்னூஞ்சல் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகோனே ஆடுக பொன்னூஞ்சல்
ஔவைக்கருள் செய்தவனே ஆடுக பொன்னூஞ்சல்
கரிமுகனே கடலமுதே ஆடுக பொன்னூஞ்சல்
கந்தனுக்கு மூத்தோனே ஆடுக பொன்னூஞ்சல்
விரியழகு மார்போனே ஆடுக பொன்னூஞ்சல்
வினைகளைத் தீர்ப்போனே ஆடுக பொன்னூஞ்சல்
சரியான வில்லூன்றிப் பதியினில் வாழும்
சித்திமுத்தி நாயகனே ஆடுக பொன்னூஞ்சல் 10

கருணைமிகு கணபதி ஈசனுமை வாழி !
கலைமகள் திருமகள் கலைசெல்வம் வாழி !
மருவும் வடிவேலனொடு திருமாலும் வாழி
மானிடர்கள் போற்றுமுயர் தெய்வங்கள் வாழி !
பெருமைமிகு தேவாரப் பதிகங்கள் வாழி !
பேரான திருக்கோணமலை நகர் வாழி
உருகிவரும் அடியார்கள் உழைப்பவர்கள் வாழி !
உயர்வான நீதிநெறி வாழ வாழியவே! 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆக்கங்களாக வெளியான, வெளிவரவேண்டிய நூல்களின் விபரங்கள்

1. சமாதான வழி நோக்கி ........................................ வெளியானது
2. திருமலை அன்னை மீது ........................................ வெளியானது
3. சித்தாண்டிமுருகன் காவடிப் பாடல்களும் அந்தாதியும் .......... வெளியானது
4. தம்பலகமம் கள்ளிமேடு ஸ்ரீமுத்து
   மாரியம்மன் காவியம் (சிறிய பிரதி).............................. வெளியானது
5. சித்தாண்டி ஸ்ரீமுத்து மாரியம்மன் காவியமும் தாலாட்டும்.......... வெளியானது
6. வெருகலம்பதி முருகன் காவடிப் பாடல்களும்,
   கீர்த்தனைகளும் ........................................ வெளியானது
7. திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தன்
   கீர்த்தனைகளும், காவடிப்பாடல்களும் .............................. வெளியானது
8. சித்தாண்டி முருகன் காவடிப்பாடல்கள்................................ வெளிவர வேண்டியது
9. சித்தாண்டி முருகன் அந்தாதி - 100................................ வெளிவரவேண்டியது
10. சிந்தை மகிழும் சித்தாண்டி முருகன் அற்புதப் பாடல்கள்.......... வெளிவரவேண்டியது
11. பக்தி ரசப் "பா"மாலைகள் ........................................ வெளிவரவேண்டியது
12. தத்துவச் செல்வங்கள்........................................ வெளிவரவேண்டியது
13. போராட்ட தாகங்கள்........................................ வெளிவரவேண்டியது
14. கரையேற்றும் ஓடங்கள்........................................ வெளிவரவேண்டியது
15. கரைதேடும் காதல் !........................................ வெளிவரவேண்டியது
16. பல்சுவைக் களஞ்சியம் ........................................ வெளிவரவேண்டியது
17. நிலவு அவள் வாசலில்! ........................................ வெளிவரவேண்டியது

மேலும் பல படைப்புகளும் வெளிவர வேண்டி இருப்பதால் அன்பு நெஞ்சங்களின் ஆதரவு தேவை.

பணிவுடன்

வி.சிகண்டிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் திருத்த வேலைகளுக்கு
உதவிய

ரூபி – மழலைச் சோலை
இல :- 284
நீதி மன்ற வீதி
திருக்கோணமலை

உரிமையாளர்

திரு :- க. கனகசிங்கம் அவர்களுக்கு
நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org